விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 26
ஒலி 038 வள்ளுவர் ஆண்டு 2056 தை 13 ஞாயிற்றுக்கிழமை (26.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ரூ.34 மில்லியன் பண மோசடி
# மகிந்தவின் மகன் யோஷித
# கைதாகி விளக்கமறியலில்

(கொழும்பு)

34 மில்லியன் பண மோசடி வழக்கில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகன் யோஷித ராஜபக்ஷ குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)



## தலைமன்னாரில் லொறி விபத்து
### நடத்துநர் மரணம்

(மன்னார்)

தலைமன்னார் கட்டைப் பறிச்சான் பகுதியில் ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்த நடத்துநர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். 19

### முடிவுக்கு வந்தது
## யாழ்.பல்கலை மாணவர்களின் உணவுத் தவிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் இரண்டு நாட்களாக முன்னெடுத்து வந்த உணவுத் தவிர்ப்பு போராட்டம் நேற்று முடிவுக்குக் கொண்டு 19

## 5 ஆயிரம் ஆண்டுக்கு முன்பே தமிழ்நாட்டில் இரும்பு பயன்பாடு
### தமிழ்நாடு தொல்லியல்துறை



(சென்னை)

5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் இரும்பு பயன்பாட்டில் இருந்தமை கண்டு 16

## அரசியலமைப்புத் தொடர்பில் கூட்டாக செயற்படுவதற்கான கலந்துரையாடல்
### தமிழரசுக் கட்சிக்கு முன்னணி உத்தியோகபூர்வ அழைப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய அரசியலமைப்பு மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் பாராளுமன்றில் கூட்டாக செயற்படுவது தொடர்பான கலந்துரையாடலுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் எழுத்துமூலமான அழைப்புக்கடிதத்தை பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 19



### புலமைப்பரிசில் பரீட்சை
## மாகாண மட்டத்தில் இருவர் முதலிடம்



(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியாகியுள்ள 2024ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின்படி முல்லைத்தீவு விசுவமடு விஸ்வநாதர் ஆரம்ப பாடசாலை மாணவன் கிசோதன் அக்ஷயன் மற்றும் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை 19



## மகிந்தவின் மகன் என்பதற்காக யோஷித கைது செய்யப்படவில்லை
### அமைச்சர் நலிந்த விளக்கம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் என்பதற்காக யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்படவில்லை என்றும் யார் சட்டவிரோதமாக அல்லது சந்தேகத்திற்கிடமான முறையில் நிலங்கள் அல்லது சொத்துக்களை வாங்கி 19



### ஜனவரி 31ஆம் திகதி முதல்
## தினசரி யாழ் - கொழும்பு அஞ்சல் ரயில் சேவை

(கொழும்பு)

ஜனவரி 31ஆம்திகதி முதல் யாழ்ப்பாணம் காங்கேசன் துறைக்கும் கொழும்புக்கும் இடையில் இரவு நேர அஞ்சல் தொடருந்து சேவை தினசரி ஈடுபடும் எனத் தொடருந்து திணைக்களப் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அத்துடன் சுற்றுலாத்தொழிற்துறையை 19

## செல்போன் வாங்குவதற்கு
### புதிய கட்டுப்பாடு

(கொழும்பு)

ஜனவரி 28ஆம் திகதி முதல் இலங்கையில் கையடக்கத் தொலைபேசிகளைக் கொள்வனவு செய்வதற்கு புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. 19

## கிளிநொச்சியில் வயலுக்கு சென்றவர் சடலமாக மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முக்கொம்பன் பகுதியில் வயலுக்குச் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த சின்னத்துரை காந்தரூபன் (வயது-38) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் வயலுக்குச் சென்றவரைக் காணவில்லை என மனைவி தேடிச் சென்றபோது வயலில் இறந்த நிலையில் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

இது தொடர்பில் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதிரி வினாத்தாள்

தேசிய பாடத்திட்டத்திற்கான மாதிரி
வினாத்தாள்கள் உருவாக்கக்கூடிய
ஆசிரியராயின் உடனடியாக
எம்மை தொடர்பு கொள்ளவும்.

**தரம் : 6 - 11**

**பாடங்கள்**

விஞ்ஞானம், கணிதம், தமிழ் இலக்கியம்,
வரலாறு மற்றும் தொழில்நுட்பம்

Call +94 70 454 6424 (Yadurshika)
or +94 70 104 6702 (Vidya)

(C-049)



## வேலைவாய்ப்பு

கட்டுமானப் பொருட்களின் இறக்குமதி
மற்றும் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள புகழ்பெற்ற
நிறுவனம் யாழ்ப்பாணத்தில் பின்வரும்
வெற்றிடங்களைக் கொண்டுள்ளது.

**♦ Clerk ♦ Stores Helpers**

தகுதியுள்ளவர்கள் உங்கள் விண்ணப்பங்களை
கல்வித்தகுதி, வேலை அனுபவம் என்பவற்றைக்
குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு மின்னஞ்சல்
அல்லது தபால் மூலம் இந்த விளம்பரம்
பிரசுரிக்கப்பட்டு இரண்டு
வாரங்களுக்குள் அனுப்பவும்.

careers@nvclgroup.com
No.155, Stanley Road, Jaffna.
Tel:021 205 0954/011 439 9433

(C-048)


# ஊழல், மோசடி விசாரணை கோப்புக்கள் மீளத் திறப்பு

## கைதுகள் தொடரும் என எச்சரிக்கிறது அரசு

நாட்டில் சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மூடி ஓரங்கட்டப்பட்டிருந்த ஊழல், மோசடி விசாரணைக் கோப்புக்கள் மீளத் திறக்கப் பட்டுள்ளன. அந்த வகையிலேயே சமூகத்தில் முக்கிய புள்ளிகள் எனக் கூறப்படுபவர்கள் கைது செய்யப்படுகின்றனர். மாறாக இது அரசியல் பழிவாங்கல் அல்லவென அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று சனிக்கிழமை (25) இடம்பெற்ற விசேட ஊடக வியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தற்போது சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் சுமார் 15 ஆண்டுகளின் பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் வழக்குத் தாக்கல் மற்றும் விசாரணைகள் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பது தற்போது தெளிவாகிறது.

கடந்த அரசாங்கங்களில் அங்கத்துவம் வகித்தவர்களுடன் தொடர்புடைய ஊழல், மோசடிகள் குறித்த கோப்புக்கள் இத்தனை ஆண்டுகளாக கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆனால் தற்போது அவை மீளத்திறக் கப்பட்டுள்ளன. அதன் காரணமாகவே தொடர்ச்சியாக சமூகத்தில் முக்கிய புள்ளிகள் எனக் கூறப்படுபவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இவை எமது தேவைக்காக முன்னெடுக்கப்படுபவை அல்ல. ஊழல், மோசடிகளில் ஈடுபட்டோரைப் பாதுகாப்பதற்கு எமது அரசாங்கம் ஒரு போதும் நடவடிக்கை எடுக்காது என்றார். (ம-7)

## மகிந்தவின்...

ரத்மலானை, சிறிமல் பிரதேசத்தில் அமைந்துள்ள 34 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள வீடு மற்றும் காணியை வாங்கியது தொடர்பாக யோஷித ராஜபக்ஷவை சந்தேகநபராகப் பெயரிட போதுமான ஆதாரங்கள் இருப்பதாக சட்டமா அதிபரால் கடந்த 23ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவித்ததைத் தொடர்ந்து இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

தற்போது தொடரப்பட்டுள்ள இந்த காணி வழக்கின் பிரதான சந்தேகநபர் யோஷித ராஜபக்ஷவின் பாட்டியான டெய்சி ஃபோரஸ்ட் என்ற பெண் ஆவார்.

இந்நிலையில் பணமோசடி சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள யோஷித ராஜபக்ஷவிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து, புதுக்கடை மேலதிக நீதவான் பவித்ரா சன்ஜீவனி முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்ட பின்னர் அவரை 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

2006 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க பணச் சலவை சட்டத்தின் கீழ் குற்றமிழைத்துள்ளமைக்கான போதுமான ஆதாரங்கள் உள்ளதாக சட்டமா அதிபர் குறிப்பிட்டமைக்கு அமையவே யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார். (ம-7)


## காணி விற்பனைக்கு

யாழ். காங்கேசன்துறையில் K.K.S
சந்தி பலாலி விமான நிலையம்
என்பவற்றுக்கு இடைப்பட்ட
பிரதேசத்தில் 7, 14, 21 பரப்பு
காணிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
**075 521 3533**

(3216)



## 31ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 30 . 07 . 1935

மறைவு 28 . 12 . 2024

28.12.2024 ம் திகதி சனிக்கிழமை
தேய்பிறை திரையோதசி திதிதனில் இறைபதம் அடைந்த

அமரர்
**லயன் மூத்ததம்பி கனகரத்தினம்**
(ஓய்வுபெற்ற பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் மாவட்டச் செயலகம் – மன்னார்)

பாசத்தின் பிறப்பிடமாய் இருந்து
பண்பின் உறைவிடமாய் வாழ்ந்து
சீலத்தில் சிறப்பான எண்ணங்களை
சிந்தையில் விதைத்தாய் – அன்று
அருகில் இருந்த நீங்கள்
இன்று திங்கள் ஒன்றாகிறது
உங்களை இழந்தே வாடுகிறோம் – இனி
எப்பிறப்பில் காண்போம் நாம் உங்களை.

"சரஸ்வதி வாசா"
மகிழடி ஒழுங்கை, பிராமனோடை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.


077 895 3861
077 611 6005

இங்ஙனம் -
குடும்பத்தினர்

(3115)



## கண்ணீர் அஞ்சலி



**திரு.சபாபதிப்பிள்ளை நித்தியானந்தன்**
(ஆனந்தன் அண்ணை)

செட்டிவளவு வீதி, இணுவில் மேற்கு,
இணுவிலைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட
சபாபதிப்பிள்ளை நித்தியானந்தன்
அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்ம சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செட்டி வீதி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

முருகையா குடும்பம்,
இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை,
யாழ்ப்பாணம், இலங்கை.

(C-2132)




## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி தனங்கிளப்பில் 85 பரப்பு
காணி உடனடி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
**076 742 4301, 075 710 9639**

(3077)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘கைபேசி’ பாவனையாளர்களுக்கு இறுக்கமாகும் சட்டங்கள்

## தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம்



**(கொழும்பு)**

**நாட்டிற்குள் சட்டவிரோதமாக தரமற்ற தகவல் தொடர்பு சாதனங்களை எதிர்காலத்தில் இறக்குமதி செய்ய வாய்ப்பே இருக்காது என்று தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் தெரிவித்துள்ளது.**

இந்த விதிகளை மீறும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராகக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும் என அதன் இயக்குநர் ஓய்வு பெற்ற ஜெனரல் எயார் வைஸ் மார்ஷல் பந்துல ஹேரத் தெரிவித்தார்.

வர்த்தகர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் கையடக்கத் தொலைபேசிகளைப் பதிவு செய்வதற்கு வழங்கப்பட்ட காலம் எதிர்வரும் 28 ஆம் திகதியுடன் முடிவடைவதாக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையம் சமீபத்தில் அறிவித்தது.

அதற்கமைய, தற்போது செயலில் உள்ள தொலைபேசிகளின் IMEI எண்கள் பதிவு செய்யப்படவில்லை என்றால், அவை எதிர்காலத்தில் தொலைத்தொடர்பு வலையமைப்புகள் செயலில் இருக்காது என்று ஆணையம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்பு IMEI எண்கள் பதிவு செய்யப்பட்ட வலையமைப்புகளுக்கு எந்தப் பிரச்சினையையும் ஏற்படுத்தாது என்று இயக்குநர் ஜெனரல் மேலும் தெரிவித்தார். (நி-8)

# வெளிநாட்டு பணமோசடி 132 பேர் கைது



வெளிநாடுகளுக்கு செல்வதற்காக சட்டவிரோத நிறுவனங்களுக்கு பணம் வழங்கும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டில் மோசடி செய்பவர்களுக்கு பணம் கொடுக்கும் சம்பவங்களில் 27% அதிகரிப்பு காணப்படுவதாக பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டில், வெளிநாடுகளுக்கு செல்வதற்காக சட்டவிரோத நிறுவனங்களுக்கு பணம் செலுத்துவது தொடர்பாக 3675 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற நிலையில் இது 2024 ஆம் ஆண்டில் 4658 முறைப்பாடுகளாக அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி 2024 ஆம் ஆண்டில் குறித்த மோசடிகள் தொடர்பாக 132 பேர் கைது செய்யப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் தெரிவித்தார்.

அத்துடன் உரிமம் பெற்ற 14 நிறுவனங்களின் உரிமையாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-8)

# சுண்டிக்குளம் கடற்கரைக்கு விஜயம் செய்த இளங்குமரன் எம்.பி

(தருமபுரம்)

சுண்டிக்குளம் சந்தி தொடக்கம் பேப்பாரப்பிட்டி கடற்கரை வரை செல்லும் 9 கிலோ மீற்றர் நீளமான வீதி பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

ஐந்து கிராமங்களைச் சேர்ந்த 1500 மீனவர்கள் கடலுக்கு செல்வதற்காக தினமும் இவ் வீதியை பயன்படுத்த வேண்டியுள்ளது. சேதமடைந்துள்ள நிலையில் வீதி காணப்படுவதால் மீன்களை உரிய நேரத்திற்கு சந்தைப்படுத்த முடியாமல் உள்ளதாக அப்பகுதி மீனவர்கள் விசனம் வெளியிட்டனர்.

அத்துடன் மாணவர்கள், நோயாளிகள் மிகவும் சிரமத்துடன் இவ் வீதியால் பயணிக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் நேற்றைய தினம் இவ் வீதியை சென்று பார்வையிட்டதுடன் புனரமைப்பு செய்து தருவதாகவும் உறுதியளித்தார். (நி-8-316)


## விற்பனைக்கு

1. யாழ்.தட்டாதெரு சந்திக்கு அண்மையில் K.K.S வீதியில் 10 பரப்பு காணியும்
2. யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில் 3 பரப்பு காணியும்
3. யாழ்.இராசாவின் தோட்ட வீதியில் 4 பரப்பு காணியும்
4. யாழ்.கந்தர்மட சந்திக்கு அண்மையில் 3 பரப்பு காணியும்
5. யாழ்.பெரிய கடை வீதியில் மலையான் கபேக்கு அண்மையில் தனிக் கடையும்
6. யாழ்.K.K.S வீதியில் 3 மாடிக் கடையும்
7. யாழ்.வெலிங்ரன் சந்திக்கு அண்மையில் 3 மாடிக் கடையும் உடன் விற்பனைக்கு உண்டு

தொடர்புக்கு
**076 133 2535**
(சி-2130)

## மணமகள் தேவை

1995, இந்து, உத்தரம், CIVIL ENGINEER
பூர்வீகம் – பருத்தித்துறை, வதியுமிடம் – AUSTRLIA
மணமகன் பதிவு இல: 11331.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(சி-047)
www.EQMarriageService.com

## மணமகள் தேவை

1991, இந்து, மூலம், MANAGER
பூர்வீகம் – புங்குடுதீவு, வதியுமிடம் – CANADA
மணமகன் பதிவு இல: 11347.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(சி-047)
www.EQMarriageService.com

## மணமகன் தேவை

1996, இந்து, பூராடம், TEACHER
பூர்வீகம் – உடுப்பிட்டி, வதியுமிடம் – திருநெல்வேலி
மணமகள் பதிவு இல: 11382.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(சி-047)
www.EQMarriageService.com

## மணமகன் தேவை

1996, இந்து, அனுசம், MANAGER
பூர்வீகம் – கரணவாய், வதியுமிடம் – நெல்லியடி
மணமகள் பதிவு இல: 11387.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(சி-047)
www.EQMarriageService.com

## மணமகன் தேவை

1996, இந்து, பூரட்டாதி, DOCTOR
பூர்வீகம் – பருத்தித்துறை, வதியுமிடம் – உடுப்பிட்டி
மணமகள் பதிவு இல: 11388.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(சி-047)
www.EQMarriageService.com

## மணமகள் தேவை

1990, இந்து, விசாகம், DOCTOR
பூர்வீகம் – மிருசுவில், வதியுமிடம் – கொழும்பு
மணமகன் பதிவு இல: 11390.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(சி-047)
www.EQMarriageService.com


## யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி தரம் 6 அனுமதி-2025

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் தரம் 6 (2025) இற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் (2024) தோற்றியவர்கள் மட்டும் பாடசாலை நேரத்தில் (காலை 8.00-1.00) விண்ணப்பப்படிவத்திற்கான கட்டணம் 150.00 ரூபாவினை செலுத்தி பெற்றுக் கொள்ளமுடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் **பதிவுத் தபாலில் மட்டுமே** அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் வழங்க ஆரம்பிக்கும் திகதி **27.01.2025**
விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத்திகதி **07.02.2025**
விண்ணப்பப்படிவம் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி அதிபர், யாழ் இந்து மகளிர் கல்லூரி, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


காலதாமதமாகி கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு :- **கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு நேர்முகத்தேர்வின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.** (சி-2129)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 477
26.01.2025


## நீக்கப்படுமா பயங்கரவாத தடைச்சட்டம்?



- அபிமன்யு -

பயங்கரவாத தடைச்சட்டம் தமிழ் மக்களை கருவறுத்தது என்று சொன்னால் அதற்கு மாற்றுக்கருத்து ஏதும் கிடையாது. அந்த அளவிற்குப் பயங்கரவாத தடைச் சட்டத்தினால் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நாட்டில் வாழும் பூர்வீக குடிகளை இவ்வாறான சட்டங்களினூடாக தண்டிப்பது ஒரு நாளும் ஏற்புடையதல்ல என்றாலும் பெரும்பான்மை ஆட்சியாளர்கள் அதைச் செய்யத்துணிந்தனர். தமிழ் இனத்தின் நியாயமான போராட்டத்தை மழுங்கடித்து அதற்கு பயங்கரவாத சாயம்பூசப்பட்ட கயமத்தனத்தை பெரும்பான்மை ஆட்சியாளர்களே மேற்கொண்டனர்.

பயங்கரவாத தடைச்சட்ட உருவாக்கம் முற்றும் முழுதாக தமிழ் இனத்தை மையப்படுத்தியது என்பதை எவராலும் மறுத்துவிட முடியாது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் வீரியத்தையும் அதன் கோர முகத்தையும் சிங்கள மக்கள் அறிந்திருக்கவில்லை. பயங்கரவாத தடைச்சட்டம் இலங்கைக்கு தேவையென்பதில் அவர்கள் உறுதியாக இருந்தனர்.

ஆயினும் "கோட்டா கோ கம" போராட்டத்திற்குப் பின்னரே பயங்கரவாத தடைச்சட்டத்தின் பாதிப்பை அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

அதுவரை தமிழ்மக்கள் மீது மட்டும் பிரயோகிக்கப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் "கோட்டா கோ கம" போராட்டத்தின் பின் சிங்களவர்கள் மீதும் பாயத்தொடங்கியது. அதன் பின்னரே சிங்கள மக்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தை எதிர்க்கத் தொடங்கினர்.

ஆக, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கோரத்தை உணர்ந்ததாலேயே அதை எதிர்க்கின்றார்கள் என்ற முடிவுக்கு நாம் வந்து விடலாம்.

தற்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் தேசிய மக்கள் சக்தி கட்சி ஆட்சியமைத்திருக்கிறது.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் என்ற வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தது.

தற்போது பலராலும் பயங்கரவாத தடைச்சட்டத்தை அரசு நீக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ள நிலையில் அண்மையில் கூடிய பாராளுமன்ற அமர்விலும் பயங்கரவாத தடைச்சட்ட நீக்கம் தொடர்பில் பேசப்பட்டது. இதற்கு பதிலளித்த நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார பயங்கரவாத தடைச்சட்டம் விரைவில் நீக்கப்பட்டு அதற்குப் பதில் புதிய சட்டமூலம் அறிமுகப்படுத்தப்படும் என்று கூறியிருந்தார்.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படுவது வரவேற்கத்தக்க விடயமாயினும் அதற்குப் பதில் புதிய சட்டமூலம் இயற்றப்படும் என்று அவர் கூறியது தமிழ் மக்களுக்கு பயத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆம், புதிய சட்டமூலம் எவ்வாறு இருக்கும்? அது தொடர்ந்தும் தமிழ் இனத்தை பாதிக்கும் வகையில் அமைந்து விடுமா என்பதே அந்தப் பயத்திற்கான காரணம்.

பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும். இன்னொருமுறை தமிழ் இனம் அதன் கோரப் பற்களுக்குள் அகப்பட்டு விடக்கூடாது இதுவே ஒட்டுமொத்த தமிழினத்தின் விருப்பு.

## வடத்தை நோக்கி படையெடுக்கும் துரித உணவு நிறுவனங்கள்



அண்மைக்காலங்களில் பல துரித உணவு வழங்கும் சர்வதேச வணிக நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தை இலக்கு வைத்து தமது விற்பனைக் கூடங்களை திறப்பதை அவதானிக்க முடிகின்றது. மிக நீண்டகால அசாதாரண நிலைமைகளுக்கு பின்னர் இவ்வாறான வணிக ரீதியான உள்வருகைகள் அதிகரித்து வருகின்றன. மேலும் பல புதிய வணிகங்கள் உள்நுழைவதற்கான அதிகளவு சாத்திய நிலைமைகள் உள்ளன. இந்நிலைமையானது உள்ளூர் உணவு சேவை வணிகங்கள்/வணிகர்களுக்கு பலமானதோர் சவாலான விடயம்.

உணவு வழங்கல் என்பது ஒரு "சேவைத்துறை". இன்று அது உலகளாவிய ரீதியில் பல புதிய தொழில்நுட்ப வளர்ச்சிகளுடன் ஒருங்கிணைந்து, போட்டித் தன்மையுடன் "பணம் உழைக்கும் முதன்மை நோக்குடன்" புதிய புதிய ரகங்களில் மிளிர்கின்றன. நீண்டகால உள்நாட்டு யுத்தம் காரணமாக இவ்வாறான நவீன உணவு வகைகளை அறிந்திராத நமது பெரும்பாலான மக்களுக்கு இவை புதியனவாகின்றன.

இவ்வகை உணவுப்பண்டங்களது விலைகள் வழமைக்கு மாறாக மிக அதிகமாகவே காணப்படுகின்றன. ஒரு மாற்றத்திற்காக இவ்வகை உணவுகளைச் சுவைக்கலாமேயன்றி, நாம் அன்றாடம் விரும்பி உண்ணும் நமது பாரம்பரிய உணவுகளைப் போல் எப்போதும் இவற்றைக் கொள்வனவு செய்ய இயலாது.

நமது பொருளாதார நிலைக்கு இவற்றின் விலைகள் மிக அதிகமாகும். மேலும், பெருந்தொகை பணத்தினை செலவிட்டு, ஆடம்பரமான வகையில் பல விளம்பர உத்திகளைக் கையாண்டு வாடிக்கையாளர்களுக்கு "திணிக்கப்படும்" இவ்வகை உணவுகளின் ஊட்டச்சத்துக்கள் தரமாக இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் எதுவும் கிடையாது.

இவை நாவுக்கு சுவையாக மட்டுமே தயாரிக்கப்படுவதுடன், அதீத விளம்பர உத்திகளில் மட்டுமே அவற்றின் வணிகரீதியான வெற்றி தங்கியுள்ளது. எமது சிறுதானிய உணவு வகைகளிலுள்ள குறைந்தபட்ச ஊட்டச்சத்துக்கள் கூட இவ்வகை உணவுகளில் நிச்சயமாக இருக்கப்போவதில்லை. மேலும் அவை கொண்டுள்ள உள்ளீடுகள் எவை? என்பதனை உரிய வணிகங்கள் வெளிப்படுத்துவதுமில்லை.

உணவு தயாரிப்பில் அதிகளவு சுகாதாரம் பேணுதல், கனிவுடன் கூடிய சிறந்த வாடிக்கையாளர் சேவை, எப்போதும் மாறாத சுவை, நிறைவான தரம் (Food Safety) மற்றும் உணவு தயாரிப்பில் நிபுணத்துவமும் நிறைந்த அனுபவமும் கொண்ட ஆளணி போன்றன இவ்வுணவு வகைகளின் மிகப்பலமான அம்சங்களாகும். இவ்விடயத்திலேயே நம்மவர்களது உள்ளூர் வணிகங்கள் மிகவும் பாரிய அளவில் சவால்களை எதிர்கொள்ள இயலாத நிலையில் பலவீனமான நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

இங்குள்ள பல உணவகங்களில் "சுகாதாரம்" என்பது மிகவும் பற்றாக்குறையாகவே இன்னமும் உள்ளது. சமையலறைப் பகுதி மிகமோசமான அசுத்தங்கள் நிறைந்ததாகக் காணப்படும். பணியாளர்கள் நிலை, வாடிக்கையாளர்களிடம் அணுகும் விதம், பல இடங்களில் உணவருந்த வருகைதரும் வாடிக்கையாளர்கள் அதிக நேரம் காத்திருந்து, உணவருந்தாமல் வெளியேறும் சம்பவங்கள். இவை போன்ற இன்னும் பல குறைகள் எம்மவர்களது வணிகங்களுக்கு மிகவும் பலவீனமான அம்சங்களாக உள்ளதுடன், புதிதாக கால்பதிக்கும் மேற்கூறப்பட்ட சர்வதேச வணிகங்களுக்கு "மிகப்பலமான" சாதகமான நுழைவாயிலாக உள்ளது.

எதிர்காலத்தில் மேலும் பல சர்வதேச அளவில் பிரபலமிக்க உணவு தயாரிப்பு வணிகங்கள் இங்கு தமது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்போது, அவை நமது உள்நாட்டு வணிக முயற்சியாளர்களுக்கு பாரிய பின்னடைவுக்கு வழிவகுப்பதுடன், எமது கணிசமான பொருளாதாரம் வெளியே செல்லும் நிலை ஏற்படும். இங்குள்ள "ஒருசில வணிகங்கள் விலக்காக" உள்ளபோதும், எம்மவர்கள் தமது தற்போதய நிலையிலிருந்து மேலும் மேம்பட்ட நிலைக்கு உயரவேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.



வாடிக்கையாளர்கள் விரும்பும் உணவு வகைகளுக்கு முன்னுரிமை வழங்குவதுடன், "அவற்றினை விசேட சுவையுடன் தயாரிக்கும் திறன்" எதிர்காலத்தில் மிக அவசியம். பல உணவகங்கள் இற்றைவரை வரையறுக்கப்பட்ட வழக்கமான சில உணவுப்பண்டங்களை மட்டுமே வழங்குவதுடன், அவற்றில் மேலும் பல வகையான மாறுபட்ட சுவைகளில் துணிவதற்கு முன்வருவதில்லை.

தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழகத்திலுள்ள பல உணவகங்களில் பல சுவைகளுடன் கூடிய விதவிதமான உணவு வகைகள் தயார்ப்படுத்தி, வாழை இலை மற்றும் இயற்கையான இலைகளில் பரிமாறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக "தோசை" எனின் நெய் தோசை, மசாலா, மிளகு / மல்லி தோசை, வெங்காயத் தோசை, எண்ணெ யுடன், சாதாரண தோசை, பனீர்த் தோசை போன்ற 40 – 60 வரையிலான தோசை வகைகள் உள்ளன.

இங்குள்ள உணவக வணிகர்கள், உணவு தயாரிப்பு சேவை வழங்குநர்கள் காலத்தின் நிலைமைகளுக்கேற்ப தமது உணவு தயாரிப்பு மற்றும் சேவைகளை உயர்தரத்துடன் வாடிக்கையாளர் விருப்பங்களுக்கேற்ப வழங்கத் தயாராக இருந்தால் மட்டுமே, தற்காலத்தின் அதிக போட்டி நிறைந்த சூழலில் நீண்டகாலத்திற்கு நிலைத்திருக்க முடியும், நமது பொருளாதாரமும் நம்மிடையே பேணப்படும்.

- ஆழ்வார் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## யாழ்ப்பாண கலாசார நிலையத்தில நடராஜர் சிலை வைக்கப்படுமா?

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.சட்டமா அதிபராக இருந்து ஓய்வு பெற்ற சிவா பசுபதி அவர்கள் அவுஸ்திரேலியா நாட்டில் காலமானார்.

இலங்கையின் சட்டமா அதிபராக இருந்த சிவா பசுபதி அவர்கள் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடந்த காலத்தில், விடுதலைப்புலிகளுக்கு சட்ட ஆலோசகராக இருந்தார்.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.


**விதானையார்:-** இந்திய அரசாங்கத்தினால் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட கலாசார மையத்திற்கு யாழ்ப்பாணக் கலாசார நிலையம் எனப் பெயர் சூட்டப்பட்டிருந்தது.

பின்னர் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையம் எண்டு பெயர் சூட்டுவதாக அறிவிக்கப்பட்டது.

இதால சில விமர்சனங்கள் எழுந்தன. இப்ப யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையம் என்பதாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் கேள்வி.

**கங்காணி:-** அட சங்கதி அப்படியோ. அப்ப ஒரு மாதிரி யாழ்ப்பாணத்தை வள்ளுவரோட சேர்த்தாச்சு போல.

**மூப்பர்:-** அது தானே பார்த்தன். யாழ்ப்பாணம் என்ற பெயர் சேர்க்கப்பட்டது தொடர்பில இலங்கைத் தமிழரசுக் கட்சி மகிழ்ச்சியும் பாராட்டும் தெரிவிக்கிறதாக முகநூல்களில இருந்தது.



சிவா பசுபதி

**மூப்பர்:-** வீட்டிற்குள்ள ஒரே குழப்பம். சொந்தக் கட்சியைக் காப்பாற்ற முடியாதவர்கள் இந்தியத் துணைத் தூதரகத்தைக் கொண்டு ஏதோ சாதிச்சமாதிரியல்லோ மகிழ்ச்சி தெரிவிக்கினம்.

**பண்டிதர்:-** ஏலவே இருந்த சிலையை வைக்க வேணும் எண்டு கேட்கிறதுக்கு ஒருத்தரும் தயாரில்லை.ஆனால் இப்ப யாழ்ப்பாணம், வள்ளுவர் என்பதோட மல்லுக்கட்டுகினம்.



**சிறாப்பர்:-**என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள்.

**பண்டிதர்:-** இஞ்சே சிறாப்பர், இந்திய அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட கலாசார நிலையம் உள்ள இடத்தில முன்பு யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கு இருந்தது. அந்த திறந்த வெளியரங்கில் ஏகப்பட்ட கலை நிகழ்வுகள் இடம்பெறுவது வழக்கம். அந்தத் திறந்தவெளி அரங்கின்ர மேற் பகுதியில ஆடும் நடராஜப்பெருமானதும் சிவகாமி அம்மனதும் சிலைகள் அமைந்திருந்தன.

பொதுவில கலை நிகழ்வுகள், நடன அரங்கேற்றங்கள் இடம்பெறும் போது அரங்கில நடேசர் சிலையை வைத்து நிகழ்வை ஆரம்பிப்பது வழக்கம்.

இந்த வழக்கத்தை எங்கட யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம் மிக நேர்த்தியாகச் செய்து வந்தது.

திருமறைக் கலாமன்றத்தின் பிதாமகர் மரிய சேவியர் அடிகளார் அதனைச் சிறப்பாகச் செய்து வந்தார்.

ஆனால் இப்போது இந்திய மத்திய அரசினால் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில நடராசப்பெருமானையும் சிவகாமசுந்தரியையும் காணவில்லை.

ஏலவே திறந்தவெளி அரங்கில இருந்த சிலைகளை திரும்பவும் வையுங்கள் எண்டு கேட்கிறதுக்கு ஆரு இருக்கினம்.

**சிறாப்பர்:-**அப்ப ஆலடி மாநாட்டில ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தால் என்ன?

(சிறாப்பர் இவ்வாறு கூறியதும் வாத்தியார் வைத்திலிங்கம் விறுக்கென எழுந்தார்.)

**வாத்தியார்:-** இந்திய மத்திய அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையத்தின் முகப்பில் சிவகாமசுந்தரி சமேத நடராசப்பெருமானின் சிலையை வைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஆலடியில் நிறைவேற்றுகிறோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று அந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:-** கிளீன் சிறிலங்கா செயற்றிட்டம் எங்கட தமிழர் பகுதியில எப்படி இருக்குது.

**மூப்பர்:-** யாழ்ப்பாணத்தில வீதியோரங்களில இருக்கிற புல்லுப்பூண்டுகளை படைத்தரப்பினர் சுத்தம் செய்வதைப் பார்த்தன்.

உண்மையில அது வரவேற்கப்பட வேண்டும். படையில இருக்கிறவர்களைக் கொண்டு இப்படியான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தால் எங்கும் தூய்மை துலங்கும்.

**கங்காணி:-** உண்மை தான். எங்கட யாழ்ப்பாண மாநகர சபை கழிவகற்றல் தொடர்பில நிறைந்த வேலைத்திட்டங்களை செய்து வருகுது. யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள்ள இருக்கிறவர்களுக்கு பதிவேடுகளை வழங்கி கிழமையில ஒருதடவை மாநகர சபையால குப்பை அகற்றுகின்ற வேலைத்திட்டம் நடந்தாகிறது. இதன் மூலம் வீதிகளில குப்பை கொட்டப்படுகிற சீர்கேடு நிண்டு போகும்.

**விதானையார்:-** நீங்கள் என்ன தான் சொன்னாலும் இன்னமும் வீதிகளில குப்பை கொட்டுகிறவர்கள் இருக்கத்தான் செய்யினம்.

**சாத்திரியார்:-** மற்றவர்களை மனிதர்களாக மதிக்காதவர்கள் இருக்கும் வரை அந்த அநியாயம் நடக்கத்தான் செய்யும்.

**விதானையார்:-** சாத்திரியார் சொல்லுறது உண்மை தான். அதேநேரம் கழிவகற்றல் தொடர்பில பொருத்தமான - நடைமுறைச் சாத்தியமான வேலைத்திட்டங்களையும் நாங்கள் அமுல்படுத்த வேணும்.

**சாத்திரியார்:-**என்னவிதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:-** குப்பைகளைத் தரம் பிரித்தால் தான், அதை எடுப்பம் எண்ட நிபந்தனையை முதலில கைவிட வேணும்.

குறிப்பாக யாழ். மாநகர சபை தனது எல்லைக்குள்ள, குப்பைகளை ஒப்படைக்கக் கூடிய இடங்களை அடையாளப் படுத்தியிருக்கிறது.

இருந்தும் அங்க குப்பைகளைக் கொண்டு போனால், தரம்பிரிக்க வேணும் எண்டு கூறி அங்க கடமையில இருக்கிற சுத்திகரிப்புத் தொழிலாளி காசு கறக்கிறதுக்குப் பிளான் போடுவார்.

அதேநேரம் எங்கட ஆட்களும் ஒரு நூறு ரூபாய் கொடுக்கப் பெரும்பாடு படுவினம். இதால உரிய இடங்களில குப்பைகளை ஒப்படைக்கிறதுக்கு எங்கட சனங்கள் விரும்புகினம் இல்லை.

இந்த நிலையில தான் குப்பைகள் வீதிக்கு வருகுது. ஆகையால தரம்பிரித்தல் என்பதைத் தவிர்த்து எல்லாக் குப்பைகளையும் எடுக்கிறதை முதலில செய்ய வேணும்.

**வாத்தியார்:-** விதானையார் சொல்லுகிற கருத்தில நானும் உடன்படுகிறன். அதேநேரம் யாழ்ப்பாணத்தில காக்கைதீவு, கல்லுண்டாய் ஆகிய இடங்களில வீதியோரங்களில குப்பைகளைக் கொட்டிப் போட்டுப் போகினம்.

அந்தக் குப்பைகளை நாய்கள் தரம் பிரித்து அந்த வீதி முழுவதும் ஒரே குப்பை மயம். ஆகையால யாழ்ப்பாண மாநகரசபை மற்றும் இதர பிரதேச சபைகள் சேர்ந்து; காக்கைதீவில குப்பைகளைப் பொது மக்கள் போடுவதற்கான ஓர் இடத்தைத் தெரிவு செய்ய வேணும்.

அந்த இடத்திற்கு வாகனங்களும் செல்லக் கூடிய வசதி இருக்க வேணும். அதேநேரம் அங்க தொழிலாளர்கள் கடமையில் இருக்கிறதோட, குப்பைகளைத் தரம் பிரிக்கிற வேலையை தொழிலாளர்கள் செய்யலாம். தரம்பிரித்த குப்பைகளைத் தான் போட வேணும் எண்ட பேச்சுக்கே இடமிருக்கக் கூடாது.

இதை நாங்கள் செவ்வமாக இருந்தால், வீதியில குப்பைகளைப் போடுகிற அநியாயம் நிண்டு போகும்.

அதோட ஆனைக்கோட்டை, நவாலி போன்ற இடங்களில உள்ள வயல்களிலும் பொலித்தீன் இல்லாத நிலைமை ஏற்படும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பயங்கரவாதத் தடைச்சட்டம் ஒழிக்கப்பட் டால் நாட்டில் நிம்மதி ஏற்படுமா?


அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

**076 097 3126**

என்ற இலக்கத்திற்கு
SMS,
Whats app செய்யுங்கள்


குமரிக் கண்டம் என்று ஒரு கண்டம் இருந்ததா வியாசரே?

**வளம்மிக்க நாடு வலுவிழந்திருக்க காரணம் என்ன வியாசரே?**

ஜெயதீபன்-பருத்தித்துறை

குட்டிக்கதை: அரசன் ஒருவன் தான் கட்டிய கோவிலின் கும்பாபிஷேகத்திற்காக நாட்டு மக்கள் அனைவரும் பசுப்பால் தரவேண்டும் என்று கட்டளையிட்டான். பால் ஊற்றுவதற்காக மிகப்பெரிய அண்டா ஒன்று ஊரின் மத்தியில் வைக்கப்பட்டது.

மறுநாள் காலை அண்டாவைப் பார்த்த அரசனுக்கு அதிர்ச்சி. பால் நிறைந்திருக்க வேண்டிய அண்டா முழுவதும் தண்ணீரால் நிறைந்திருந்தது.

ஊர்மக்கள் அனைவரும் பால் ஊற்றும் போது நான் ஒருவன் ஊற்றும் தண்ணீர் தெரியப் போகிறதா என நினைத்து அனைவரும் ஊற்றியது பால் அல்ல, நீர்.

எமது நாடு வலுவிழந்ததற்கு மேற்குறித்த கதை மிகப் பொருத்தமானது.

**தியாகம் என்றால் என்ன வியாசரே?**

பிரவீஸ்-பருத்தித்துறை

தன் தங்கையைச் சீரழித்தவனின் தலையைக் கொய்து அந்தத் தலையையும் கொண்டு பொலிஸாரிடம் சரணடைகிறான் அண்ணன் ஒருவன்.

சட்டத்தின் முன் நான் குற்றவாளி ஆனால் என் சகோதரியின் ஆத்மாவிற்கு நான் செய்தது சரியாய்படும் என்று வாக்குமூலமளித்தான் அவன்.

இப்போது சொல்லுங்கள் அந்த அண்ணனின் தியாகம் எப்பேர்ப்பட்டது?

**நியாயமாக வாழ்வது இக்காலத்தில் ஆபத்தானதா வியாசரே?**

ஷாரா-கரணவாய்

ஒருவர் தனது தாய் மற்றும் மனைவியுடன் காரில் சென்று கொண்டிருக்கிறார்.

அவரைப் பின்தொடர்ந்த பொலிஸ் அவர் வாகனத்தை மறிக்கிறது.

நீண்டதூரம் உங்களை பின்தொடர்ந்தோம். வீதி விதிகளை மீறாமல் உங்கள் சாரத்தியம் இருந்தது. வாழ்த்துக்கள் என்று கூறி ஆயிரம் டொலரை பரிசாக வழங்கினார்கள்.

பணத்தை வாங்கிய அவர் கடவுளே எப்படியாவது இந்தப் பணத்தில் லைசன்ஸ் எடுத்துவிட வேண்டும் என்றார்.

பொலிஸார் திகைத்துப் போய் நிற்க, மனைவி கூறினாள் அவர் இப்படித்தான் மதுபோதையில் உளறுவார் என. இதை எதுவும் உணராத காது கேட்காத தாய் கூறினார்.

இதுதான் திருட்டு வண்டியை எடுத்து வராதே என்று படித்துப் படித்துச் சொன்னேன் என்று.

இந்த உலகில் நியாயவாதிகளுக்கு வாழ்வில்லை என்பதே உண்மை.

**நீ பிறருக்கு எதைக் கொடுக்கிறாயோ அதை உனக்கே கொடுக்கிறாய் எனும் வசனம் தொடர்பில் தங்கள் கருத்து என்ன?**

குரு-யாழ்ப்பாணம்

எம்மில் பலருக்கு இது புரிவதே இல்லை. தினம் தினம் உழைக்கும் பணத்தை குடித்தழிக்கும் ஒருவருக்கு பணத்தை சேமித்து வை. உனது இறுதிச் சடங்கிற்காவது அது உதவு மல்லவா என்றேன்.

அதற்கு அவர் சொன்னார், நான் இறந்த பின்னர் என் பிணத்திற்கு என்ன நடந்தால் எனக்கென்ன. அது எதுவும் எனக்குத் தெரியாது தானே.

இருக்கும் போது அனுபவித்து விட வேண்டும் என்று.

உன் சிந்தனைகள் ஒவ்வொன்றும் உன்னை எதிர்காலம் போற்றும்படி இருக்க வேண்டும்.

ஏனென்றால் நீ கொடுப்பது எதுவோ அதுவே உனக்கு மீண்டும் தரப்படும் அவ்வளவு தான்.

**வியாசரே நான் உங்களுடன் கனவில் கதைத்தது உண்மை என்று நினைத்து விட்டேன்?**

மதுவன்-மீசாலை

நல்ல வேளை உங்கள் பெயர் மதுவன் என்று இருந்தது. இதுவே மதுவினி ஆக இருந்திருந்தால் என் மனைவி என்னை மருத்துவமனைக்கு அனுப்பியிருப்பாள். கடவுளுக்கு நன்றி.




**பெற்றோர் என்னைத் தனியாக வெளியே விடுவதற்கு பயப்படுகிறார்களே வியாசரே?**

கோபி-நவிண்டில்

"கோபி" யர்களை, நம்பி அனுப்ப இப்போது எவரும் கிருஸ்ணர்கள் இல்லையே.

**புலிகளை வென்றவன் என்று கூறிக்கொண்டு மக்கள் வரிப்பணத்தில் சுகபோகம் அனுபவிப்பது சரியா?**

சுதன்-குப்பிளான்

திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது.

ஒரு தடவை திருடியவன் திருந்த வாய்ப்பிருக்கிறது. ஆனால் திருட்டை தொழிலாய் செய்பவனை திருத்திவிடலாமா சொல்லுங்கள்?

மக்களின் சொத்தைக் கொள்ளையடிக்க பலருக்குப் புலிப் பூச்சாண்டி தேவையாகவே உள்ளது.

**குமரிக் கண்டம் என்று ஒரு கண்டம் இருந்ததா வியாசரே?**

விஜாசகன்-யாழ்ப்பாணம்

இந்தியாவின் தெற்குப் பக்கமாக இந்தியப் பெருங்கடலில் மூழ்கியிருக்கும் பெரு நகரமே குமரிக் கண்டம் எனப்படுகிறது.

தமிழர்களின் பண்டைய நகரமாகவும் நாகரிகமாகவும் காணப்படும் குமரிக்கண்டத்தை புனைகதை என்று கூறுபவர்களும் உள்.

19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய, அமெரிக்க அறிஞர்கள் குமரிக்கண்டம் கடலில் மூழ்கி இருப்பதற்கான சான்றுகள் இருப்பதாக தகவல் வெளியிட்டிருந்தனர்.

**பயங்கரவாதத் தடைச்சட்டம் ஒழிக்கப்பட்டால் நாட்டில் நிம்மதி ஏற்படுமா?**

விஜயகுமார்-முகமாலை

பயங்கரவாதத் தடைச் சட்டம் அதிகம் பாய்ந்தது தமிழினத்தின் மீதே.

இது உருவாக்கப்பட்டதே தமிழினத்தின் நேர்மையான போராட்டத்தை எதிர்மறையாக்கும் சிந்தனையுடனேயே.

இப்போது பயங்கரவாதம் அழிக்கப்பட்டு விட்டதாய் கூறுகிறார்கள். ஆனால் கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழினத்தின் நெஞ்சை நோக்கி பாயும் அம்பாய் நீண்டு நிற்பது ஏன் என்பதுதான் இன்னும் புரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்:தில்லுமுல்லு
பாடலாசிரியர்:கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர்: எஸ்.பி.பாலசுப்ரமணியம்

ராகங்கள் பதினாறு உருவான வரலாறு
நான் பாடும் போது அறிவாயம்மா
ராகங்கள் பதினாறு உருவான வரலாறு
நான் பாடும் போது அறிவாயம்மா
பல நூறு ராகங்கள் இருந்தாலென்ன
பதினாறு பாட சுகமானது
பல நூறு ராகங்கள் இருந்தாலென்ன
பதினாறு பாட சுகமானது

ராகங்கள் பதினாறு உருவான வரலாறு...

கலை மாது தான் மீட்டும் இதமான வீணை
கனிவான ஸ்வரம் பாட பதமானது
கலை மாது தான் மீட்டும் இதமான வீணை
கனிவான ஸ்வரம் பாட பதமானது

அழகான இளம் பெண்ணின் மேனி தான் கூட
ஆதார ஸ்ருதி கொண்ட வீணையம்மா
அழகான இளம் பெண்ணின் மேனி தான் கூட
ஆதார ஸ்ருதி கொண்ட வீணையம்மா

ராகங்கள் பதினாறு உருவான வரலாறு....

இடையாட வளையாட சலங்கைகள் ஆட
இடையோடு கொடி போல நடமாடினாள்
இடையாட வளையாட சலங்கைகள் ஆட
இடையோடு கொடி போல நடமாடினாள்

உலகாளும் உமையாளின் ராக பாவங்கள்
ஆனந்தம் குடி கொண்ட கோலமம்மா
உலகாளும் உமையாளின் ராக பாவங்கள்
ஆனந்தம் குடி கொண்ட கோலமம்மா

ராகங்கள் பதினாறு உருவான வரலாறு
நான் பாடும் போது அறிவாயம்மா
பல நூறு ராகங்கள் இருந்தாலென்ன
பதினாறு பாட சுகமானது ஆ...
பல நூறு ராகங்கள் இருந்தாலென்ன
பதினாறு பாட சுகமானது

ராகங்கள் பதினாறு உருவான வரலாறு....

அன்பு வாசகர்களே!
காலத்தால் அழியாத கானம் பகுதியில்
உங்களுக்குப் பிடித்த பழைய
பாடல்களை, பெயர், முகவரியுடன் வட்சப்
செய்தால் உங்கள் விருப்பப் பாடல்
உங்கள் பெயருடன் வெளிவரும்.
076 097 3126

# அள்ளித்தரும் ஐந்து யோகங்கள்

செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகிய கிரகங்களால் ருசக, பத்ரா, ஹம்ஸ, மாளவ்யா மற்றும் சசயோகம் என ஐவகை யோகங்கள் உண்டாகின்றன. உங்கள் ஜாதகப்படி இவற்றில் ஒரு யோகம் அமையப் பெற்றாலும் பெரும் அதிஷ்டம் உண்டாகும் என்கின்றன ஜோதிட நூல்கள்.

**ருசக யோகம்:** செவ்வாய் தனது சொந்த ராசிகளாகிய மேஷம், விருச்சிகம் அல்லது உச்ச ராசியாகிய மகரத்தில் இருக்க, மேற்படி ராசிகள் கேந்திரமாகவும் அமைவது ருசக யோகம் ஆகும். இப்படியான யோகம் அமைந் தால் நல்ல உறுதியான உடல் அமைப்பும் வேகமான தன்மையும் ஜாதகருக்கு உண் டாகும்.

ருசக யோகத்தில் பிறந்தவர் நீண்ட முகம் உடையவர் தீரமான செயல்கள் புரிந்து, செல்வம் சம்பாதிப்பவர், தைரியமானவர், எதிரிகளை வெல்பவர், அதிகாரம், வலிமை உள்ளவர். தன் திறமையால் புகழ்பெறுபவர். தன் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி அடைபவர். அரசனுக்குச் சமமானவர். தியாகம் செய்யத் தயங்காதவர். பக்தி உடையவர். 70 வயதுக்கு மேற்பட்ட ஆயுள் உடையவர்.

**பத்ரா யோகம்:** புதன் தனது மிதுனம் அல்லது கன்னி ராசிகளில் இருக்க, மேற்படி ராசிகள் கேந்திரமாகவும் அமைவது பத்ரா யோகம் ஆகும். பத்ரா யோகத்தில் பிறந்தவர் அதிர்ஷ்டமானவர், வலிமையான உடலு டையவர், சுத்தமானவர், கற்றவரும் பாராட் டும்படி உள்ளவர். மிகப் பெரும் செல்வந்தர். பிறவியிலேயே அறிவாளி. நல்ல பேச்சாளர்.



தன் பேச்சில் யாரையும் கவரும் திறம் உடையவர். புலி போன்ற வேகமும், யானை போன்ற நடையும், அகன்று விரிந்த மார்பும், நீண்ட கைகளும், உயரமும் அதற்கு ஏற்ற பருமனும் உடையவர். பெரும் புகழுக்குச் சொந்தக்காரர் ஆகும் வாய்ப்பு உண்டு. இவர்கள் 80 வயதுக்கு மேற்பட்ட ஆயுள் உடையவர்கள்.

**ஹம்ஸ யோகம்:** குரு தனது சுய ராசிகளாகிய தனுசு, மீனம் அல்லது உச்ச ராசியாகிய கடகத்தில் இருக்க, மேற்படி ராசிகள் கேந்திரமாக அமைவது ஹம்ஸ யோகம் ஆகும். இந்த யோகம் அமையப் பெற்ற ஜாதகர், பாலையும் நீரையும் பிரித்து எடுக்கும் குணம் கொண்ட ஹம்ஸம் எனும் அன்னம் போன்றவர். அழகு, வசதி வாய்ப் புகள், சுயமரியாதை, தூய்மையான மனம், சரியான தீர்ப்பு இவற்றோடு ஊதாரிக் குணமும் உள்ளவர். நல்லவர் நட்பாலும் உதவியாலும் புகழ் பெறுவர். அவர் கைகளி லும், கால்களிலும் சங்கு, தாமரை, மீன், அங்குசம் போன்ற ரேகைகள் இருக்கும். நன்னடத்தையும், அழகான உடலும், உயர்ந்த சிறப்பான உணவைப் புசிப்பவரும் ஆவார். சகலத்தையும் அறிந்தவராகவும் ஆசாரமாகவும் இருக்கும் இவர், 80 வயதுக்கு மேற்பட்ட ஆயுள் உடையவர்.

மாளவ்ய யோகம்: சுக்கிரனால் அமையும் யோகம் மாளவ்ய யோகம். சுக்கிரன் தனது சுய ராசிகளாகிய ரிஷபம், துலாம் அல்லது உச்ச ராசியாகிய மீனத்தில் இருக்க, மேற்படி ராசி கேந்திர வீடாக அமைவது மாளவ்ய யோகம் ஆகும். மாளவ்ய யோகத்தில் பிறந்தவர் உறுதியான உடல், செல்வம், உறுதியான மனம், அன்பும் பண்பும் நிறைந்த வாழ்க்கைத்துணை, அறிவான குழந்தைகள், நல்ல அதிஷ்டம், செல்வச் செழிப்பு, சுவையான நல்லுணவு, சந்தோ ஷங்களை அனுபவித்தல், நல்ல வாகன வசதி, புகழ், கல்வி உடையவர் ஆவார். தீர்க்கமான புலன்கள் உடையவர். அழகான கண்கள் தாராள குணம் கொண்டவராக இருப்பார். இவர், 75 வயதுக்கு மேற்பட்ட ஆயுள் உடையவர்.

**சச யோகம்:** சனி தனது சுய ராசிகளான மக ரம், கும்பம் அல்லது உச்ச ராசியாகிய துலா மில் இருக்க, மேற்படி ராசிகள் கேந்திர மாக அமைவது சச (மக்கள்) யோகம் எனப்படும். சச யோகத்தில் பிறந்தவர் அரசு அதிகாரம், தலைமைப் பண்பு, ஏராளமான செல்வம் ஆகியவற்றை உடையவர். எல்லோராலும் புகழப் படுவர் ஆவார். இவர்களுக்கு நல்ல வேலை யாட்கள் அமைவர். இந்த யோகம் கொண்ட வர்கள், ஒரு கிராமம் அல்லது நிலப் பகுதிக த்த் தலைவராக விளங்குவார். மகிழ்ச்சி உடையவர். தாயிடம் பணிவுள்ளவர். 70 வயதுக்கு மேற்பட்ட ஆயுள் உள்ளவர்.

பஞ்ச மஹா புருஷ யோகங்கள் லக்னத்திலி ருந்து அமைவதைப் பார்த்தோம். இவ்வாறே சந்திரனிலிருந்து அமைந்தாலும், அவையும் 'பஞ்சமஹா புருஷ யோகங்கள்' எனப்படும்!

**இந்த 5 யோகங்களில் ஒன்று இருந்தால் போதும் நீங்கள் பெரிய அதிர்ஷ்டசாலி!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் மீண்டெழுமா காசா?



வரலாற்றுக் கதைகள் படிப்பவர்களுக்கு இந்த விடயத்தைக் கற்பனை செய்வது சுலபமாக இருக்கும். அந்தக் காலத்தில் மன்னர்களின் கோட்டைகள் எதிரிப் படைகளால் முற்றுகை செய்யப்படுவதைப் படித்திருக் கலாம்.

சுற்றிலும் எதிரிகள் சூழ்ந்திருக்க, எந்த நிமிடத்திலும் தாங்கள் தாக்குதலுக்கு ஆளாகலாம் என்ற அச்சம் இருக்க, அந்தக் கோட்டைக்குள் வாழும் மக்களின் மனநிலை என்னவாக இருக்கும்?

அப்படியான ஒரு வாழ்க்கையைத்தான் 15 மாதங் களுக்கு மேலாக காசா மக்கள் வாழ்ந்தார்கள். 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு தெற்கு இஸ்ரேல் மீது தாக்குதல் நடாத்தியது.

இந்த தாக்குதலில் இஸ்ரேலில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டதுடன் 250 பேர் கடத்திச் செல்லப்பட்டனர். சுமார் 100 பணயக்கைதிகள் இன்னும் காசாவிற்குள் உள்ளனர், அவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இறந்துவிட்டதாக தகவல் வெளியாகியது. இதேநேரம் பாலஸ்தீனம் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல்களி னால் 46.000இற்கும் அதிகமானவர் கொல்லப்பட்டுள் ளனர்.

110,000இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் காயம டைந்துள்ளதுடன் 17,000இற்கும் மேற்பட்ட போராளி களைக் கொன்றதாக இஸ்ரேலிய இராணுவம் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இஸ்ரேலிய இராணுவத்தின் தொடர் குண்டுவீச்சுகள் காசாவின் பெரும்பகுதியை தரைமட்ட மாக்கியதுடன், காசாவில் இருந்த 23 லட்சம் மக்களில் 19 லட்சம் மக்கள் இடம்பெயர்வதற்கும் காரணமாக அமைந்தது.

இஸ்ரேல் ஹமாஸ் மோதல் உக்கிரமடைந்த நிலையில் ஹமாசை அடியோடு ஒழிப்பதாக சூளுரைத்த இஸ்ரேல் ஹமாஸ் மீது கொடூர தாக்குதல் மேற்கொண்டது. இந்த தாக்குதல்களில் ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸ் தலைவர்கள் அடுத்தடுத்து படுகொலை செய்யப்பட்டனர்.

இவ்வாறான நிலையில் ஒரு வருடத்திற்கு மேலாக நீடித்த போர் முழுமையாக நிறுத்தத்திற்கு வந்தது. முதற்கட்டமாக இஸ்ரேலிய பணய கைதிகள் மூவரை ஹமாஸும், பாலஸ்தீனிய கைதிகள் 90 பேரை இஸ்ரேலும் விடுவித்தது. போர் நிறுத்தம் தொடங்கியுள்ள நிலையில் காசாவில் தாங்கள் கைவிட்டுச் சென்ற வீடுகளை நோக்கி மக்கள் மீண்டும் வரத் தொடங்கியுள்ளனர்.

5 மாதங்களாக வெளியேற்றப்பட்டு சொந்த நாட்டில் அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்த காசா மக்கள் கல்லாகவும் மண்ணாகவும் எஞ்சிய கட்டடங்களை கடந்து சிதிலங்கள் ஊடாக தங்கள் வீடுகளின் எச்சங்களுக்குத் திரும்பத் தொடங்கினர். தெருக்களை சுத்தம் செய்து தங்கள் வாழ்வை மீண்டும் கட்டமைக்கும் முயற்சியை நம்பிக்கை யுடன் தொடங்கியுள்ளனர்.

ஆனால் சேதங்கள் சரிசெய்யப்பட்டு காசாவில் மீண்டும் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவது அவ்வளவு எளிதானது அல்ல என்பதே நிதர்சனமான உண்மை. காசாவில் புனரமைப்பு பணிகளை நடத்தி முடிக்க 350 ஆண்டுகளுக்கு மேல் ஆகலாம் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் மத்திய கிழக்கில் ஏற்பட்ட இந்த கோர அழிவு வரலாறுகளில் எப்போதும் கரைபடிந்த இரத்தத்தினால் எழுதப்பட்டிருக்கும் என்பதே நிதர்சனமான உண்மை.

**- ஜூனியர் விகடன் -**



# ஆச்சி அறிவுரை



## துலாக் கிணறு

### என்ன பேராண்டி...

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் வந்திட்டுதாம். நீ பாஸ் எண்டு அப்பா சொன்னான். வாழ்த்துக்கள்.
பேராண்டி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பாஸ் பண்ண வேணும் எண்ட ஆர்வம் இருக்கலாம் ஆனால் அது வெறியா மாறக்கூடாது. அந்த வெறி பெத்தவர்களிட்டதான் நிறைஞ்சு கிடக்குது. பாஸ் பண்ணின பிள்ளைகள் கெட்டிக்காரர்கள் எண்டும் பெயில்விட்ட பிள்ளைகள் கெட்டித்தனம் இல்லை எண்டும் பொருள் இல்லை. அதால இதைப் பெரிசா எடுத்துக் கொள்ளத் தேவையில்லை.

சரி இண்டைக்கு துலாக் கிணறு பற்றிப் பார்ப்பம். கிணறு சரி, அதென்ன துலாக்கிணறு எண்டு யோசிக்கிறியோ. யோசனை வரும்தானே. துலாக் கிணறுகளை எல்லாம் உடைச் சுப்போட்டு கிணறுகளை பிளாற் போட்டு மூடிட்டு, மோட் டரைப் பூட்டி சுவிச்சுப் போட்டா தண்ணீர் இறைக்கிற நவீன யுக மெல்லோ இது. கிணத்துக்குப் பக்கத்திலை இரண்டு பெரிய தூண் கட்டி அதுன்ர இடையிலை பனை மரத்தை வடிவாச் சீவி அடிப்பகுதியை கிணத்தின்ர பின் பக்கத்துக்கும் நுனிப் பகுதியை கிணத்தின்ர மிதிப்பகுதிக்கும் வாறமாதிரி வச்சு பிணைச்சிருக்கும். அதிலை கயிறு மாட்டி வாளிகட்டியிருக்கும். இது கிணத்து மிதிப்பகுதியிலை நிண்டு தண்ணி அள்ள சுலபமா இருக்கும்.

துலாவின்ர அடிப்பகுதியில பாரத்துக்காக கல்லு கட்டியிருக்கும். இது தண்ணி நிறைஞ்ச வாளிய மேல இழுக்க மிகச் சுலபமாக்கிறத்துக்காக இருக்கும். முந்தி நாங்கள் எல்லாரும் இந்த துலாவிலதான் தண்ணி அள்ளுவம், குளிப்பம், உடுப்புத் தோய்ப்பம். ஏன், உன்ர அப்பாவை குளிப்பாட்டுற தெல்லாம் இதிலைதான். துலாவில, தான் தண்ணி அள்ளப் போறன் எண்டு அடம்பிடிப்பான். உன்ர தாத்தா கண்டா கொண்டு போடுவார் எண்டு பயப்புடுத்தினா கேட்டிடுவான்.


இதே துலாக் கிணத்திலதான் தோட்டத்துக்கு தண்ணீர் இறைக்கிற வேலையும் நடக்கும். அதுக்காக ஒருதர் துலாவின்ர நடுப்பகுதியில ஏறி நிற்பார். மற்றவர் வாளியைப் பிடிச்சு தண்ணியைக் கோலி அள்ளி அதைச் சுலபமா வெளிய எடுத்து வாய்க்காலில விடுவார். துலாவில நிக்கிறவர் துலாவின்ர இரு பக்கத்திற்கும் நடந்து உந்துவிசையை கொடுக்கிறது தண்ணி அள்ளுறதுக்கு சுலபமா இருக்கும்.

இப்ப எல்லாம் மிசின் யுகமாப்போச்செல்லோ? மனிச உழைப்புக்கு இடமே இல்லை. இதுன்ர முடிவு எது தெரியுமோ, சனம் முழுவதுக்கும் நாற்பது கடந்தவுடன சலரோக வருத்தம் தொத்திக்கொள்ளுறதுதான். நாங்கள் எப்ப எங்கட வாழ்வியல் முறையை மாத்தினமோ அப்பவே மனிச இனத்தின்ர ஆயுள் குறைஞ்சுபோச்சுது. குரக்கன், சாமை, திணை, மரவள்ளி, பனங்கிழங்கு, பனாட்டு, நுங்கு, இளநீர், கைக்குத்தரிசி எண்டு எங்கட வாழ்வியல் வேறமாதிரி.

இப்ப கொத்துரொட்டி, பிறைட் றைஸ், பீசா, பர்க்கர் எண்டு ஏதோ கறுமத்தயெல்லாம் சாப்பிட்டு காசு கொடுத்து வருத்தத்தை விலைக்கு வாங்கிறம். ம்ம்... என்ன சொல்ல. இதுகள உனக்குச் சொல்லியாவது என்ர ஆதங்கத்த தீர்த்துக் கொள்ளுவம் எண்டு தான் பேராண்டி.

**பாட்டி வருவா...**

மாவை நா.கஜேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழுந்தாய் ஒடிந்துபோகும் வாழ்வு...!

இவர்கள்...!
கதிரவன் துயிலெழும்புமுன் – துயிலெழும்பி
கொழுந் தெடுக்கச் செல்லும் குருவிகள்

உச்சி மலை ஏறி
உச்சி வெயிலில் காய்ந்து
கொழுந் தெடுக்கும் – நம்
நாட்டின் முது கெலும்புகள்

பிரஜா உரிமைகளோ....
தனி வீடு காணி உரிமங்களோ – அன்றி
“லயம்” களில் தவிக்கும் “மனோ லயங்கள்”

ஆண்டவனும் ஆள்பவனும்
கைவிட்ட பின்னும்
நம் நாட்டிற்காய் தேயிலைக் காட்டிற்குள்
தங்களையே கரைத்துக் கொள்ளும்
அஸ்தமனங்கள்...!

இவர்களுக்கு...
நாம் கொடுத்த பட்டங்கள்...

சாந்தையூரிவன்

## புரிந்துகொள் மணவாளா !



கடையில் இருந்த என் மீது உன்
கடைக்கண் பார்வை விழுந்ததினால் கைப்பொம்மை
ஆகிவிட்டேன் உடைக்குள் இருந்த என்னை
உருவி எடுத்தாய் என்ன செய்வாயோ பயந்தேன்
என் உதட்டோடு உன் உதட்டை பொருத்தினால்
என் ஒருபகுதி தீப்பிடித்துக் கொண்டது
என்னால் நீ சுகம் பெற்றாய் நான் மெல்ல மெல்ல
என்னை இழந்து கொண்டிருந்தேன் இறுதியில்
மேசைப் பெட்டி என்னை வரவேற்றது
உன்னால் நிறையப்பேர் அங்கே
பாதிக்கப்பட்டிருந்தார்கள் என்றாலும் உன்மேல்
அனுதாபப்பட்டு இதைச் சொல்லச் சொன்னார்கள்
புகைப்பதனால் புற்றுநோய் உண்டாகும்
புரிந்துகொள் மணவாளா!

துணவியூர் நடா

## தன்னம்பிக்கை



தன்மேல் தனக்கிருக்கும்
ஆளுமையின் உச்சம்
தன்னம்பிக்கை!

தன்மானம் பிழைத்திடவே
தக்கவைக்கும் மிச்சம்
தன்னம்பிக்கை!

எல்லாமே தொலைத்த பின்னும்
எஞ்சியிருக்கும் சௌபாக்கியம்
தன்னம்பிக்கை!

ஜீவனே போனபின்னும்
உயிர்த்தெழும் வைராக்கியம்
தன்னம்பிக்கை!

அனுதாபப் பார்வைகளை
அறுத்தெறியும் கூர்வாள்
தன்னம்பிக்கை!

அனைத்துமிங்கு சாத்தியமே என
அறிவித்திடும் சுய அறிவால்....
தன்னம்பிக்கை!



வளலாய் லயன்சன்

## வாழும் ஞானம்...

அலைகள் எழுப்புகின்ற
நினைவுகளை
புலன்கள் உணர்ந்த பின்பும்
சிந்திக்கத் தெரியா
மனிதர்களிடம் சிறைப்படுவதை விட்டு

சத்தங்கள் ஏதுமின்றி
அலைந்து திரிய ஏதுவாக
மௌனப்பெருங்காட்டை
உருவாக்கிக் கொண்டு
உலகின் ஓசைகளில் இருந்து
உதிர்ந்து விடுதல் ஒப்பற்ற தியானம்..



சத்தங்களிலிருந்து மௌனத்திற்கு
திரும்புகையில்
புதியாய் உணரும் இந்த
பிரபஞ்சம் இனிய வரம்..

ஆக
விடுபடுதல் என்பதே
வாழும் ஞானம்..

சங்கரி சிவகணேசன்

## அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமான சங்குநாதத்தில்
நீங்களும் எழுதலாம்....

- அரசியல்
- இலக்கியம்
- கவிதை
- கட்டுரை

ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி,
தொலைபேசி இலக்கம் என்பவற்றை
குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126

## அன்பு

வீரையாச் சின்னப்பா நீ பெரிய வீரன்தான்
நாய்படாப் பாடிங்கே நாளெல்லாம் பட்டாய் நீ!
கம்பு, கிடுகு கடை வைத்தாய்! மாடடைத்து
நம்பிக்கையோடு சுரை, நாடை, வெண்டி, கத்தரிகள்,
நாட்டி நீர் ஊற்றி நலம் காணப் பாடுபட்டாய்!
சைக்கிள் சுழற்றிச் சரிக்கட்டி காற்றடிப்பாய்!
வெட்கப்படாது வெளியூர்போய் நெல், அரிசி
வாங்கிவந்து விற்பாய்! “வதனா” உன்பிள்ளையை
வாழ்விக்க வேண்டுமெனும் வாஞ்சையில்
நீ பாடுபட்டுக் கற்பனையில் பூரித்தாய்!
கடலலைபோல் ஓயாது புத்திரிக்கு வீடும்,
புதுக்கிணறும் கட்டி வைத்தாய் தாயில்லாப்
பிள்ளையென – தங்க நகை பலவும்,
செய்தெடுத்துப் போட்டாய்! சிறப்பையெதிர்
பார்த்திருந்தாய்! உன்னுடைய பிள்ளை உனக்கே உலைவைத்தாள்!
என்னென்று சொல்வேன்? எவனோ ஓர் பையன் பின்
சுற்றுகிறாள் என்று சுருக்கென்று கோபித்தாய்! உன்மகளுக்கேசி
ஒருநாள் தடுத்தாய் நீ! அந்தப் பயலோ அவளின் புகைப்படத்தை
கையிலே கொண்டெங்கும் காட்டித் திரிந்திட்டான்! பைய அதைப்
பிய்த்தெடுக்கப் பார்த்தவனைக் கேட்டாய் நீ!
கேள்விகள் முற்றிக் கிலிபிடிக்க, வேகத்தில் தோளைப் பிடித்தாய் நீ;
தொல்லை வந்து சூழ்ந்ததுவே! மல்லுப் பிடித்தவனோ
மாமனென்றும் பார்க்காமல், பொல்லை எடுத்துவந்து போட்டானுன் மண்டையிலே!
கல்லை உடைப்பதுபோல் கையால் தலையுடைத்தான்! வாட்டில்
கிடக்கின்றாய்! வாய்பேச மாட்டாய் நீ! கையை உசுப்பிக் கதைத்தால்
நீ கண்ணீரே சிந்துகிறாய்! மூக்காலே பால்நீர் செலுத்துகிறார்
கைகால் உதறுகிறாய்! காண்போர் கலங்குகிறார்! சைகைகள்
கூடச் சரியாகக் காட்டாய் நீ! வாட்டில் கிடக்கின்றாய் வாய்பேச மாட்டாய்நீ;
வீட்டிலே யுன்பிள்ளை அவ் வீணனுடன் சேர்ந்து சிரிக்கின்றாள்!
உன் நிலையோ சீரியஸ் என்கின்றார். அருமை மகளை அறிந்தாயா?
நீ வாழ்க வீரையாச் சின்னப்பா நீ பெரிய வீரன்தான்!



மு. சடாட்சரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களம் பல கண்ட யாழ் கோட்டை

செங்கை ஆழியான்

41

ஆயுதப்போராட்டத்தில் முதலாளித்துவ வர்க்கம் அதிகாரத்தைச் சமாதான மாகக் கையளித்ததுமில்லை. அரச யந்திரங்கள் தாக்கப் பட வேண்டும்.

1971 இல் நாடளாவிய புரட்சியொன்றினைத் தோற்றுவிக்க றோகன விஜயவீர முயன்றார் ஆனால், அதற்கு முன் 13, மார்ச், 1971 இல் அப்பாறையில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவருடன் அவரியக்கத்தைச் சேர்ந்தலால் சோமஸ்ரீ. பிரேமரத்ன, நிசங்க விஜயரத்ன, ஹெலி சேனனாயக்க ஆகியோரும் கைதாகினர்.

அவர்கள் முதலில் மட்டக்களப்புச் சிறையில் வைக்கப்பட்டனர். பின்னர் கொழும்பு மகசின் சிறையிலும் கொழுப்பு றிமான்ட் சிறையிலும் வைக்கப்பட்டனர். அங்கு இவர்களை வைத்திருப்பதில் பாதுகாப்புக் கஷ்டங்கள் இருப்பதை அறிந்து 14. மார்ச் இராணுவ வாகனங்களில் யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலைக்கு இடம் மாற்றப்பட்டனர்.

அன்றே நாடு முழுவதும் அவசர காலநிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது. வெகு இரகசியமாக இது நடந்தாலும் சிறை இடமாற்றம் வெளியில் தெரிய வந்தது. 18 ஆம் திகதி றோகன விஜயவீரவின் தாயார் மகனைப் பார்த்துச் செல்ல, யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைக்கு வந்தார்.

20 ஆம் திகதி எஸ் டி. பண்டாரநாயக்கவும் மாத்தயாவும் (இது வேறு மாத்தயா. இவரின் பெயர் உயன்சொட) காரில் யாழ்ப்பாணம் வந்தனர். அவர்களால் கோட்டை சிறையில் இருந்த விஜய வீரவைப் பார்க்க முடியவில்லை.

அனுமதி கிடைக்கவில்லை. எஸ் டி. பண்டாரநாயக்க, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆரம்ப கால அங்கத்தவராக இருந்தவர். கம்பகாப் பாரளுமன்றப் பிரதிநிதியாகவும் விளங்கியவர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதும். பீக்கிங் கம்யூனிசக்கட்சி அங்கத்தவரானார். பின்னர் ஜே வி.பி. ஆதரவாளரானார். 21. மார்ச் 1971 இல் யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச் சாலையிலிருந்து, விஜய வீரவும் அவருடன் லால் சோம ஸ்ரீ, பிரேமரத்ன ஆகியோரும் கல்முனை நீதி மன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். நீதி மன்றத்து அடைப்புக் கூட்டினுள் இருக்கும்போது விஜயவீர மற்றைய இருவருக்கும் தெளிவாக ஒரு தாக்குதலிற்கான விளக்கத்தைக் கொடுத்தார்.

"என்னைச் சிறையிலிருந்து விடுவிப்பதற்கு 500 ஜே வி.பி. போராளிகள் யாழ்ப்பாணம் வர வேண்டும். சிறையைத் திட்டமிட்டு உடைத்து என்னை உடன் விடுவிக்க வேண்டும். அவ்வாறு வருபவர்களுடன் லால் சோம ஸ்ரீ அல்லது பிரேமரத்ன கூட வந்து நான் இருக்கும் சிறை அறையைக் காட்ட வேண்டும்.

(தொடரும்...)

---

# கடல் புறா

## இரகசியத்தின் திறவுகோல்




காலத்தின் பதிவு 136

பலவர்மனுக்குத் தான் ஒற்றர்கள் அதிகமாயிற்றே! ஒருவேளை அவன்? என்று நினைத்துப் பார்த்து. "சே, சே! இருக்காது! இருக்காது என்ன? திட்டமாய் இல்லை. நான் குடிக்கவில்லை. குடித்தாலல்லவா மயக்க மருந்து என்னை வீழ்த்தியிருக்கும்! என்று பலபடி நினைத்துத் திண்டாடிய கூல வாணிகன் இது அத்தனைக்கும் விளக்கத்தை அமீரிடமாவது. படைத்தலைவனிடமாவதுதான் கேட்க வேண்டும் என்று தீர்மானித்துக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு படைத்தலைவனிருக்கு மிடத்தை நோக்கி நடந்தான்.

சேந்தன் மாடியின் இரு வாசல் அறைக்குள் கையும் மெழுகுமாக நுழைந்தபோது அமீரும் படைத் தலைவனும் மிக ரகசியமாக, எதையோ பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களிருவரையும் மாறி மாறிப் பார்த்தான் சேந்தன் பல விநாடிகள். அவனது மருண்ட பார்வையைக் கண்ட படைத்தலைவன், "என்ன பார்க்கிறாய் சேந்தா? வா உள்ளே! மெழுகில் அமைப்பு எடுத்து விட்டால் அதை இங்கு கொண்டு வருவானேன்? நீயே வார்ப்பட்டக்காரனிடம் கொடுத்திருக்கலாமே?" என்றான்.சேந்தனுக்கு என்ன சொல்வ தென்று புரியவில்லை. "மெழுகில் அமைப்பு இல்லை" என்றான் குழப்பத்துடன். இளையபல்லவன் இமைகள் மேல் எழுந்து கோபமும் கேள்வியும் கலந்த சாயையை முகத்தில் படரவிட்டன. "வெறும் மெழுகை என் கண்கள் பார்த்ததில்லை என்ற நினைப்பா உனக்கு!" கோபம் குரலிலும் ஒலிக்கக் கேட்டான் படைத்தலைவன். "இல்லை படைத் தலைவரே" என்றான் சேந்தனும் சற்றுக் கோபத்துடன்."பின் எதற்கு இந்த மெழுகைக் கொண்டு வந்தாய்?" படைத்தலை வன் கேள்வி முன்னையதை விட உக்கிரமாக எழுந்தது. "உங்களுக்குக் காட்டக் கொண்டு வந்தேன்.

அது மட்டுமல்ல" என்று கோபம் தணியாமலே சொன்னான் சேந்தன். "வேறென்ன?" "விளக்க மும் கேட்க வந்தேன்." "என் னிடமா?" "முதலில் உங்களிடந்தான் விளக்கம் கேட்க எண்ணினேன். இப்பொழுது கருத்தை மாற்றிக் கொண்டு விட்டேன்."எப்படி மாற்றிக் கொண்டாய்? "அமீர்தான் பதில் சொல்ல வேண்டும் எனக்கு" என்று உக்கிரத்துடன் கூறிய கூலவாணிகன், அறைக்குள் வந்து கதவையும் சாத்திவிட்டு, "அமீர்! இப்பொழுது நாம் பேசலாம் தெளிவாக," என்றும் அமீரை நோக்கிச் சொன்னான்.

அமீரின் பெருவிழிகள் வியப்பினால் இருமுறை உருண்டன. என்ன பேச வேண்டும் நாம்? என்று வினவினான் அமீர் வியப்புக் குரலில் பலமாக ஒலிக்க.

"நான் சாவியில் ஒற்றி எடுத்த மெழுகு எங்கே?" என்று கேட்டான் கூலவாணிகன். என்ன உளறுகிறாய் சேந்தா? ஏது சாவி? என்ன மெழுகு? என்று மிதமிஞ்சிய ஆச்சரியத்துடன் மறுபடியும் வினவினான் அமீர. கூலவாணிகன் பொறுமை இழந்தான். அமீர்! என்னிடம் விளையாடாதே நேற்றிரவு சந்தித்தபோது என்ன செய்தாய் என்னை? என்று மிகுந்த சீற்றத்துடன் கேட்டான்.

அமீரின் கண்களிலிருந்த ஆச்சரியச் சாயை முகமெங்கும் படர்ந்தது. நேற்றிரவு உன்னைச் சந்தித்தேனா! என்று கேட்டான் அமீர் கூலவாணிகனை உற்று நோக்கி. "ஆம்." கூலவாணிகன் குரல் உறுதியாயிருந்தது.

எங்கு சந்தித்தேன்?" பலவர்மனின் அந்தரங்க அறையில். அக்ஷயமுனைக் கோட்டைத் தலைவன் அறையிலா! அங்கு எதற்காகச் சென்றாய் நீ? படைத்தலைவர் கட்டளையை நிறைவேற்ற. அங்கு என்னைச் சந்தித்தாயா? ஏன் உனக்கு நினைப்பில்லையா? இதைக் கேட்ட அமீர் ஏளனம் தொனிக்க நகைத்தான். நினைப்பா! இருக்கிறது இருக்கிறது! உனக்கும் எனக்கும் பலவர்மன் அவன் அறையில் விருந்து வைத்தானா? என்று அமீரின் கேள்வியிலும் ஏளனம் மண்டிக் கிடந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

434

வலம்புரியின் மருத்துவச்சுடர்

புற்றுநோய் என்பது கலங்களின் கட்டுப்பாடற்ற பெருக்கமாகும். இதன் காரணமாக புற்றுநோயானது தான் தோன்றிய இடத்தில் பரவி அவ்விடத்தில் உள்ள இழையங்களை அழிக்க வல்லது. அதுமட்டுமல்லாது புற்றுநோய் தோன்றிய இடத்தில் இருந்து தொலைவில் உள்ள அங்கங்களுக்கும் இரத்தம் மூலமாக அல்லது வேறு வழிகளிலோ பரவி அந்த அங்கங்களையும் அழிக்க வல்லது. இறுதியில் சிகிச்சை அளிக்கப்படாத விடத்து அது மரணத்திற்கு இட்டுச் செல்லும். புற்றுநோய் பரவும் விதங்களின் அடிப்படையில் அது பல நிலைகளாக வகைப்படுத்தப்படுகிறது.


இதை Staging என்று கூறுவார்கள். நிலை 1 மற்றும் நிலை 2 ஆகியவை, புற்றுநோயின் ஆரம்ப நிலைகளாகக் கருதப்படுகிறன. இவ்விரு நிலைகளும் புற்றுநோய் தோன்றிய இடத்தில் அல்லது அதற்கு அண்மித்த இடங்களில் மட்டுப்படுத்தப்பட்டதாகும். நிலை 3 மற்றும் நிலை 4 என்பன கட்டுப்பாடற்று பரவும் தன்மையுடைய புற்றுநோய்களாக கருதப்படுகின்றன. ஆரம்ப நிலை புற்றுநோய்களான நிலை 1 மற்றும் நிலை 2 என்பனவற்றை பூரணமாக குணப்படுத்தக் கூடிய வாய்ப்பு காணப்படுகிறது. ஆனால் நிலை 3 மற்றும் நிலை 4 என்பவற்றை முற்றாக குணப்படுத்த முடியாது.

சமூகத்தில் பலருக்கு புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படுகின்றது. இதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. வயது அதிகரிக்கும் போது புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பும் அதிகரிக்கிறது. பொதுவாக பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய், கருப்பை கழுத்து புற்றுநோய், சூலகப் புற்றுநோய் போன்றவை ஏற்படலாம். இவற்றைத் தவிர, சில உணவுப் பழக்கவழக்கங்களும் புற்றுநோயை ஏற்படுத்தும். உதாரணமாக, புகைத்தல், புகையிலை, பாக்கு, சுண்ணாம்பு போன்றவற்றை சுவைப்பதால் வாய் மற்றும் தொண்டை புற்றுநோய்கள் அதிகமாக ஏற்படுத்தும். அதோடு, கட்டுப்பாடற்ற மதுபான பழக்கம், களப் புற்றுநோய், இரைப்பை புற்றுநோய், குடல் புற்றுநோய் என்பவை ஏற்படுவதற்கு முக்கியமான காரணியாக காணப்படுகிறது. தற்போது எமது உணவுப் பழக்கவழக்கம், பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கத்தில் இருந்து வேறுபட்டு காணப்படுகிறது. புகையூட்டிய உணவுகள், கொழுப்பு, சிவப்பு இறைச்சி எனப்படும் மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி போன்றவற்றை அதிகமாக உட்கொள்ளுதல், நார்ச்சத்து, விற்றமின் மற்றும் உயிர்ச்சத்து குறைவான உணவுகளை உட்கொள்ளுதல் போன்ற பழக்கங்களால் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கிறது.

அதுமட்டுமல்லாது, ஒருவரின் இரத்த சம்பந்தமுடைய உறவினர்களுக்கு புற்றுநோய் காணப்படும் போது, அவருக்கும் புற்றுநோய் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாக காணப்படும். அதிலும் குறிப்பாக இளம்வயதுப் புற்றுநோயாளிகளின் உறவினர்களுக்கு புற்றுநோய் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். இது தவிர தொழில் சார்ந்த புற்றுநோய் அபாயங்களும் காணப்படுகின்றன. உதாரணமாக, அஸ்பெஸ்டோஸ் தொழிற்சாலைகளில் பணி புரிதல், இரசாயனங்களை அதிகமாக கையாளுதல் போன்றவையும் புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணிகளாக காணப்படுகின்றன. மேலும், குறிப்பிட்ட இடம் சார்ந்த புற்றுநோய்களும் ஏற்படக்கூடும். மிக முக்கியமாக, உடற் செயற்பாடு குறைந்த வாழ்க்கை முறை எமது ஆரோக்கியத்தைப் பாதிப்பதோடு அது புற்றுநோய் ஏற்படவும் மறைமுக காரணியாக காணப்படுகிறது.

எமது பிரதேசத்தில் பிரதானமான புற்றுநோய்களாக மார்பகப் புற்றுநோய், வாய் தொண்டை மற்றும் கழுத்து புற்றுநோய், களம் மற்றும் இரைப்பை புற்றுநோய், பெருங்குடல் புற்றுநோய், கருப்பை கழுத்து புற்றுநோய், சூலகப் புற்றுநோய், ஈரல், பித்தப்பை புற்றுநோய், புரொஸ்டேட் புற்றுநோய், எலும்பு மற்றும் மென்னிழைய புற்றுநோய் போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஆரம்பத்திலேயே புற்றுநோய்களை கண்டறியும் முறைகள் இரண்டு வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

முதலாவது, புற்றுநோய் அறிகுறிகள் தோன்றுவதற்கு முன்பே புற்றுநோயினை கண்டறிதல் இரண்டாவது, புற்று நோய் அறிகுறிகள் தோன்றிய உடன், காலம் தாழ்த்தாமல் வைத்திய பரிசோதனைகளை மேற் கொண்டு, புற்றுநோயினை கண்டறிதல். இவை இரண்டுமே புற்றுநோய்களை, ஆரம்ப நிலையிலேயே கண்டறிய மிக உதவியாக இருக்கும். புற்றுநோய் அறிகுறிகள் தோன்றுவதற்கு முன்பே புற்றுநோயினை கண்டறியும் Cancer screening methods எனப்படும் அடிப்படை பரிசோதனை முறைகள், உலகமெங்கும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை, சில பொதுவான புற்றுநோய்களுக்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் புற்றுநோயின் ஆரம்ப நிலைகளையும் கண்டறியலாம். இந்நிலையில் புற்றுநோய்கள் கண்டறியப்படும் போது, 95% அவற்றை முற்றாக குணப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் காணப்படுதலே, இம்முறையின் மிக முக்கியமான அனுகூலமாகும்.



புற்றுநோய் அறிகுறிகள் தோன்றிய உடன், அவற்றை கணடறியும் முறைக்கு, புற்றுநோய் மற்றும் புற்றுநோய் அறிகுறிகள் பற்றிய பொது மக்களின் அறிவு, புற்றுநோய் அறிகுறிகள் தோன்றிய உடன் காலம் தாழ்த்தாமல் வைத்திய உதவியை நாடுதல், உரிய பரிசோதனைகளை மேற்கொள்ளல் போன்றவை உதவியாக இருக்கும். புற்றுநோய்களை இந்நிலையில் கண்டறிந்தால் கூட, நோய் நிலைமைக்கு ஏற்றவா 85-90% அதனை முற்றாக குணப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் காணப்படுகிறது. எனவே தான், புற்றுநோய்களை ஆரம்பத்திலேயே, புற்றுநோய் முன்னறி சோதனைகள் மூலம் கண்டறிய வேண்டிய அவசியம் காணப்படுகிறது.

## ஆரம்ப நிலைகளில் புற்றுநோய்களை கண்டறிதல்

பொதுவான புற்றுநோய்களுக்கான அறிகுறிகள் பற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். அவை, ஆரம்ப புற்றுநோய்க்குரிய அறிகுறிகள் மற்றும் கட்டுப்பாடற்ற புற்றுநோய்க்குரிய அறிகுறிகள் என இரண்டாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. மார்பகப் புற்றுநோய்க்கு, ஆரம்பத்திலேயே மார்பகத்தில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். இதன் முதலறி சோதனையாக நனோகிரம் எனும் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. (தொடரும்...)

Dr. க.சிறிதரன்
புற்றுநோய்
சத்திரசிகிச்சை நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லுக்கான உத்தரவாத விலையை உடனடியாக நிர்ணயிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

நெல்அறுவடை சந்தையை வந்தடைந்தபோதும் நெல்லுக்கு உத்தரவாத விலை நிர்ணயிக்கப்படவில்லை என்றும் இதன் விளைவாக ஒரு கிலோ நெல்லின் விலை 110 முதல் 120 ரூபாய் வரை குறைந்துள்ளதாக விவசாயிகள் போராட்ட இயக்கம் தெரிவித்துள்ளது.

உத்தரவாத விலையை நிர்ணயிக்காததுடன் அரசாங்கம் இன்னும் நெல் கொள்முதல் செய்யும் செயல்முறையை தொடங்கவில்லை.

எனவே நெல்லுக்கு உத்தரவாத விலையை அவசரமாக நிர்ணயிக்க வேண்டும் என அமைப்பின் தேசிய அமைப்பாளர் விமல் வட்டுஹேவா தெரிவித்தார்.

திருகோணமலைப் பகுதியில் அறுவடையின் பின்னர் நெல் தற்போது சந்தைக்கு வந்திருப்பதாகவும், அதன்படி, சிவப்பு நெல் ஒரு கிலோ 110 முதல் 120 ரூபாய் வரையிலும் மற்ற வகை நெல் 110 முதல் 115 ரூபா வரையிலும் குறைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)




## 32ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்.இ.ச.பேரம்பலம் - ESP

**வாரிவளவு காரைநகர்**

**திதி – துவாதசி**

**“மண்ணிற் பிறந்தவர் பயன் பிறரையும் வாழ வைத்தல்”**

என்ற எண்ணக்கருவிற்கேற்ப ஏராளமானவரின்
வாழ்விற்கு வளமூட்டியவர், வணிகத்துறையில்
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை, நீதி, நியாயம்
என்பவற்றிற்கு இலக்கணமாகத் திகழ்ந்து
இன்றும் “ESP” என்ற பெயர் எல்லோர் மனங்களிலும்
நிலைபெற்று நீங்காது நிற்க வழி வகுத்தவர்.

அமரர் **ESP** விண்ணுலகு சென்று **32 ஆண்டுகள்**
நிறைவடைந்த நிலையில் அன்னாரது
ஆன்ம ஈடேற்றம் வேண்டி வாரிவளவு கற்பக விநாயகர்
பாதம் தொழுது நிற்கிறோம்.

(C-2119)

இல.383, “மணியோசை”
கோயில் வீதி,
நல்லூர்.

கல்விக்காருண்யன்,
லயன் கலாநிதி E.S.P நாகரத்தினம் PMJF
குடும்பத்தினர்


# இராசிபலன்

26.01.2025
தை 13, ஞாயிற்றுக்கிழமை
துவாதசி முன்னிரவு 8.15 மணிவரை

கேட்டை காலை 7.49 மணிவரை
சுபநேரம் 9.36-11.06 மணிவரை
இராகுகாலம் 5.06-6.36 மணிவரை

சந்திராஷ்டமம்-
ரோகிணி

**வளவன்**

**மேஷம்** – வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் உருவாகும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள்.

**ரிஷபம்** – உடல்நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், விரயங்கள் மேலோங்கும் நாள், கௌரவக்குறைவான நாள்.

**மிதுனம்** – நண்பர்களால் ஒருசில நன்மைகள் இடம்பெறலாம், வீட்டு உபயோகப்பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கல்யாணக்கனவுகள் நனவாகும்.

**கடகம்** – பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பகை ஒன்று நட்பாகலாம், உறவினர்களின் சந்திப்பால் உளம் மகிழ்வீர்கள், கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**சிம்மம்** – பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எண்ணங்கள் எளிதில் கைகூடும்.

**கன்னி** – குடும்பத்தினர் உங்கள் சொற்களைக் கேட்டு நடப்பர், வழிபாட்டில் ஆர்வம் கூடும், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், கடன் சுமை குறையும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** – உடன்பிறப்புக்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், நீண்ட நாளைய விரும்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, தேகநலனில் அக்கறை கூடும்.

**விருச்சிகம்** – விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, அனைத்திலும் வெற்றி பெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பெரிய மனிதர்கள் வீடுதேடிவரும் நாள்.

**தனுசு** – சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள்.

**மகரம்** – தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** – குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மீனம்** – சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.

**நீ புகழை வெறுத்தால் புகழ் உன்னைத் தேடி வரும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சட்ட மாநாடு





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகச் சட்டத்துறையின் ஏற்பாட்டில் வருடாந்தம் நடத்தப்படும் யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாடு நேற்று யாழ்.பல்கலைக் கழகத்தில் ஆரம்பமானது.

மாற்றத்திற்கான கருவியாக சட்டம் என்னும் சாரப்பட செயற் படல், நிலை மாற்றம், நிலைத் திருப்பு என்னும் தொனிப் பொருளில் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்வருட மாநாட்டின் முதல் நாள் நிகழ்வில் உயர் நீதிமன்ற நீதியரசர் ப்ரீத்தி பத்மன் சூரசேன பிரதம விருந்தினராகவும், தகவல் உரிமை ஆணைக் குழுவின் ஆணையாளர்களில் ஒருவரான ஹிஷாலீ பின்டோ ஜெயவர்த்தன சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர். (நி-8-33)

# அதிரடி நடவடிக்கைகளை ஆரம்பித்த ட்ரம்ப் அரசாங்கம்!

- சுமார் 538 சட்டவிரோத குடியேற்றவாசிகள் கைது
- நூற்றுக்கும் மேற்பட்டோர் நாடுகடத்தல்

**(வோஷிங்டன்) —— சட்டவிரோத குடியேற்றவாசிகளை அடையாளம் கண்டு கைது செய்யும் பணிகளை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆரம்பித்துள்ளார்.**

முதற்கட்டமாக 538 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களில் நூற்றுக்கும் மேற்பட்டோர் இரா ணுவ விமானங்கள் மூலம் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கரோலின் லீவிட் தெரிவிக்கையில்,

சட்டவிரோதமாக குடியேறிய 538 குற்றவாளிகளை ட்ரம்ப் நிர்வாகம் கைது செய்தது.

இதில் ஒருவர் பயங்கரவாதி என சந்தேகிக்கப்படும் நபர், ட்ரென்டி அரகுவா கும்பலைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள் மற்றும் சிறார்களுக்கு எதிரான துஷ்பிரயோகக் குற்றங்களில் ஈடுபட்ட பல சட்டவிரோதக் குற்றவாளிகள் ஆகியோரும் அடங்குவர்.

ட்ரம்ப் நிர்வாகம் நூற்றுக் கணக்கான சட்டவிரோத குடியேற்றவாசிகளை இராணுவ விமானங்கள் மூலம் நாடு கடத்தி உள்ளது. வரலாற்றில் மிகப்பெரிய நாடு கடத்தல் நட வடிக்கை சிறப்பாக நடைபெற்று வருகிறது. அளிக்கப்பட்ட வாக் குறுதிகள் நிறைவேற்றப் படுகின்றன எனக் குறிப்பிட்டுள் ளார்.

இது தொடர்பாக வெள்ளை மாளிகையின் எக்ஸ் தளத் திலும் தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதில், நமது நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்க ட்ரம்ப் நிர்வாகம் செய்து வரும் பணியின் ஒரு சிறிய முன்னோட்டம் மட்டுமே இது என்று கூறி உள்ளது.

அமெரிக்க குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்கத் துறையால் கைது செய்யப்பட்ட சிலரின் பெயர்களையும், அவர்கள் செய்த குற்றங்களையும் குறிப்பிட்டுள்ளது. (நி)





சங்கானை பிரதேச செயலகத்தில் கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை பிரதேச செயலர் தலைமையில் வட்டுக்கோட்டை சமுர்த்தி வங்கி வலயத்திற்கு உட்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் சமுர்த்தி சமுதாய மட்ட அமைப்பினருக்கும் கணக்கறிக்கையிடல் தொடர்பான பயிற்சி நடைபெற்றது. இதில் வளவாளராக வேலணை சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் கனகரத்தினம் சபேசன் கலந்து கொண்டார்.




# கிளிநொச்சியில் இடம்பெற்ற அறுவடை விழா

(கிளிநொச்சி)

நெற்செய்கையில் விவசாய நவீனமயமாக்கல் கிராமங்களை உருவாக்கும் முன்மாதிரி செயற்றிட்ட அறுவடை விழா நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடம் மற்றும் விவசாய திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் நெற்செய்கையில் விவசாய நவீனமயமாக்கல் கிராமங்களை உருவாக்கும் முன்மாதிரி செயற்றிட்டமாக முன்னெடுக்கப்பட்டது.

குறித்த செயற்றிட்டத்தின் அறுவடை நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், கொமர்சல் வங்கியின் பொது முகாமையாளர் டிலக்சன் கெட்டியாராட்சி, யாழ். பல்கலைக்கழக விவசாய பீட விரிவுரையாளர்கள், விவசாய திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள், பொறியியலாளர்கள், யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட மாணவர்கள், விவசாயிகள், வங்கி ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு விழிப்புணர்வு ஆவணப்படம் யாழ்.இந்துவில் வெளியிட்டு வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் அனுசரணையில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஒளிப்படக்கலைக் கழகத்தின் தயாரிப்பு மற்றும் ஒளிப்படமாக்கலில் உருவான டெங்கு விழிப்புணர்வு தொடர்பான ஆவணக் குறும்படம் கடந்த 20ஆம் திகதி திங்கட்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர், ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், சிறப்பு விருந்தினர்களாக செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறுதிருமுருகன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன், வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் சமன் தர்மஶ்ரீ பத்திரன, யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரி ரம்யா சந்திரசேகரன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் இ.செந்தில்மாறன், யாழ். மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன், பொது மருத்துவ நிபுணர் த.பேரானந்தராஜா, வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ப.ஜெயராணி ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-8)

# எம்.ஜி.ஆரின் பிறந்தநாள் நிகழ்வுகள்



(யாழ்ப்பாணம்)

புரட்சித் தலைவர் அமரர் எம்.ஜி.இராமச்சந்திரனின் 108 ஆவது பிறந்ததின நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவையின் தலைவர் பொன்.மதிமுகராஜா விஜயகாந்த் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (நி-8)

# ஆண்டுவிழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யா/உசன் இராமநாதன் முன்பள்ளியின் ஆண்டுவிழா நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

முன்பள்ளியின் முகாமைத்துவக் குழுவின் தலைவர் இ.சுரேன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் காப்பாளர் நடராசா சச்சிதானந்தன், சிறப்பு விருந்தினர்களாக, தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக முன்பள்ளி மேற்பார்வையாளர் மயில்வாகனசிங்கம் இராசலட்சுமி, யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலய பிரதி அதிபர் வை.விஜயகுமார், பிரதம நிறைவேற்று அதிகாரி வரதன் கஜேந்திரன் (Yarl International College of Skills Development (pvt) ltd), பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் நிரோஜினி கஜேந்திரன் (Yarl International College of Skills Develop ment (pvt)ltd) , கௌரவ விருந்தினராக உசன் கந்தசாமி கோவில் பிரதமக் குருக்கள் பிரம்ம ஶ்ரீ இ.கேதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-8)

# 'பசுந்துளிர்' இதழுக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையால் வெளியிடப்படுகின்ற பசுந்துளிர்-இதழ் 10 இற்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

குறித்த பிரதேச மக்களின் கல்வி, கலை, கலாசாரம், வாழ்வியல் தொன்மைகள், நாட்டுப்புறவியல், ஆன்மீகம், மரபுரிமைகள் போன்ற விடயங்களை பிரதிபலிக்கும் வகையிலான கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், ஆவணத்தரவுகள், விமர்சனங்கள், பிரதேசத்தின் பெருமைகள், வரலாற்றுத் தேடல்கள், பாரம்பரிய உந்துகள், நாட்டார் வழக்கியல் போன்ற எழுத்தாக்கங்களை குறித்த பிரதேசத்தினை பூர்வீகமாக கொண்டவர்கள் அல்லது பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக பிரிவில் தொழில் நிமித்தம் கடமை புரிகின்றவர்கள் பிரதேச செயலாளர், பிரதேச செலயகம், பச்சிலைப் பள்ளி என்ற முகவரிக்கு 28.02.2025 இற்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (நி-8)

# 'பயணிக்கின்றன பாதைகள்' கவிதை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஆரணி எழுதிய "பயணிக்கின்றன பாதைகள்" கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 29 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பச்சிலைப்பள்ளி, பிரதேச செயலாளர் கவிஞர் இ.த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு சுவாமி தோட்ட இயக்குநர் அருட் தந்தை செ.யூட் அமலதாஸ் அடிகளார் கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக தர்மக்கேணி மூத்த கலைஞர் கலாபூசணம் செல்லையா சுந்தரம்பிள்ளை, பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.திருமாறன், 'துளிர்' சமூக சேவை அமைப்பின் தலைவர் எம்.பி.தீபன், யாழ்.மாவட்ட சிறுவர் சம்மேளன தலைவர் மரியசீலன் எலக்ஸ்ரின்ராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-8)

# அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் பவளவிழா மகாநாடும் புத்தக வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபை பவளவிழா மகாநாடும் புத்தக வெளியீடும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கோண்டாவில் ஶ்ரீ வல்லுபுரநாதர் தேவஸ்தான திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபைத் தலைவர் பொன்.கனகரத்தினம் (J.P) தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில் நீரியல் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் கலந்து கொள்ளவுள்ளதுடன் கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கிழக்கு மாகாண ஆளுநர் ஜ.ரத்னசேனா, யாழ்.இந்திய துணைத்தூதர் சாய் முரளி, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அத்துடன் இந்நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட பாராளுன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன், ச.ஶ்ரீபவானந்தராஜா, இ.அர்ச்சுனா ஆகியோருடன் கோண்டாவில் ஶ்ரீ நாராயண சனசமூக நிலைய தலைவர் ச.கஜிதீபன் கோண்டாவில் ஶ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான தலைவர் ந.அரியரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வின் ஆசியுரைகளை ஶ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், ஆனைக்கோட்டை காரைப்பிரான் ஆதி விநாயகர் தேவஸ்தான பிரதம குரு பிரம்ம ஶ்ரீ சோம சிவகுமார குருக்கள், யாழ்.மறை மாவட்ட ஆயர் கலாநிதி.யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம், யாழ்.நாகவிகாரை தலைமை மதகுரு கலைமாமணி மீகஹஜந்துறே ஶ்ரீவிமலதேரர், யாழ். கிளிநொச்சி மாவட்ட அகில இலங்கை ஜம்மியதுல் உலக மகாசபை செயலாளர் மௌலவி அல்ஹாயிக் ஏ.எம்.றகீம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-8)




# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 450 | 400 | 500 | 500 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 900 | 900 | 1000 | 800 |
| தக்காளி | 400 | 400 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 250 | 200 | 200 |
| கோவா | 200 | 200 | 250 | 300 |
| கரட் | 300 | 400 | 300 | 450 |
| பூசணி | 100 | 120 | 150 | 200 |
| புடோல் | 150 | 150 | 200 | 200 |
| வாழைக்காய் | 120 | 140 | 150 | 250 |
| சின்ன வெங்காயம் | 450 | 380 | 350 | 700 |
| பெரிய வெங்காயம் | 280 | 280 | 250 | 300 |
| பாகற்காய் | 500 | 600 | 400 | 500 |
| வெண்டக்காய் | 200 | 400 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 800 | 600 | 600 | 800 |
| லீக்ஸ் | 350 | 380 | 300 | 450 |
| பீற்றூட் | 550 | 400 | 400 | 450 |
| கறிமிளகாய் | 1000 | 700 | 700 | 800 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 1200 | 2000 |
| போஞ்சி | 400 | 300 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 350 | 300 | 450 |
| கீரை – 1 பிடி | 120 | 120 | 150 | 150 |
| தேசிக்காய் | 300 | 350 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 240 | 150-200 | 180-240 |
| இராசவள்ளி | 450 | 800 | 450 | 700 |
| வெங்காயப்பூ | 450 | 300 | 450 | 500 |
| முள்ளங்கி | 100 | 120 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 60 | 150 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 |
| [illegible] | 100 | 100 | 100 | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
28 - 02 - 1967



உதிர்வு
25 - 01 - 2025

## பொன்னுத்துரை ரவிச்சந்திரநேசன்

திருநெல்வேலி தலங்காவில்பிள்ளையார் கோவிலடி, பதிவுகாரர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. பொன்னுத்துரை ரவிச்சந்திரநேசன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் 25.01.2025 சனிக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தங்கமாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும் கெங்காதேவியின் அன்புக் கணவரும் நிதர்சன்(கனடா), நிவேதா(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் துரைச்செல்வி(லண்டன்), ஐங்கரநேசன்(யாழ்ப்பாணம்), ஆறுமுகநேசன் (லண்டன்), பத்மினி அனுசூயை(கனடா), ஸ்ரீ தத்தாத்திரேயநேசன் (யாழ்ப்பாணம்), திருக்கேதீச்சரநேசன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று 26.01.2025 ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி தலங்காவில்பிள்ளையார் கோவிலடி பதிவுகாரர் ஒழுங்கையில் உள்ள அன்னாரது இல்லத்தில் காலை 10 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை வைக்கப்பட்டு அதன் பின்னர் இறுதிக்கிரியைகளின் பொருட்டு கனடாவுக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பொ.ஐங்கரநேசன் - 077 556 5460
பொ.ஸ்ரீதத்தாத்திரேயநேசன் - 077 2760 493

(3219)

## 5 ஆயிரம் ஆண்...

பிடிக்கப்பட்டுள்ளதாக தமிழ் நாடு தொல்லியல் துறை தெரிவித்துள்ளது.

இதன்படி உலகளவில் இரும்பை உருக்கி பயன்படுத்தும் தொழில் நுட்பம்தான் முதலில் இருந்திருக்கலாம் என ஆதிச்சநல்லூர் ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

ஆதிச்சநல்லூர், சிவகளையில் கிடைத்த மாதிரிகளை காலக்கணக்குக்கு உட்படுத்தியதில் இது தெரியவந்திருப்பதாக அந்த ஆய்வு கூறுகிறது.

தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரிலும் சிவகளையிலும் கிடைத்த இரும்பு தொல்பொருட்களை ஆய்வு செய்தபோது அவற்றின் காலம் கி.மு. 3,345 வரை செல்வதாக தமிழக தொல்லியல் துறை வெளியிட்டுள்ள ஆய்வு முடிவுகள் கூறுகின்றன.

அதாவது, சுமார் 5,350 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பின் பயன்பாடு தமிழ்நாட்டில் இருந்தது கண்டறியப்பட்டிருப்பதாக இந்த ஆய்வு கூறுகிறது.

இதற்கு முன்பாக கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறையில் கிடைத்த இரு இரும்புப் பொருட்களுடன் இருந்த கரிமப் பொருட்கள் ஏ.எம்.எஸ் (Accelerator Mass Spectrometry - ஒரு மாதிரியில் உள்ள ஐசோடோப்புகளின் விகிதங்களை அளவிடும் நுட்பம்) என்ற முறையில் காலக்கணக்கீடு செய்யப்பட்டபோது ஒரு கரிமப் பொருளின் சராசரி மைய அளவீட்டுக் காலம் கி.மு. 2172 என்று தெரியவந்தது.

ஆகவே தமிழ்நாட்டில் இரும்பின் பயன்பாடு 4,200 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததாக கருதப்பட்டது. தற்போதைய முடிவுகளின்படி இரும்பின் பயன்பாடு மேலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் இருப்பது தெரியவந்திருக்கிறது.

"இரும்பின் தொன்மை" என்ற பெயரிலான இந்த ஆய்வறிக்கையை வெளியிட்டுப் பேசிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தற்போது வெளிவந்துள்ள காலக்கணிப்பின்படி உலகளவில் இரும்பை உருக்கிப் பயன்படுத்தும் தொழில்நுட்பம் தமிழநாட்டில்தான் முதலில் இருந்திருக்கலாம் எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

(ம-7)


இரண்டாம் மொழி சிங்களம் - 2025

தரம் 6, தரம் 10 வகுப்புக்களுக்கான இரண்டாம் மொழி சிங்களம் புதிய பிரிவுகளுக்கான வகுப்புக்கள் ஆரம்பம்.

27.01.2025 - திங்கட்கிழமை


இடம்: " இலங்கை வேந்தன் திருமண மண்டபம் அருகில் "
இல. 55/6, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

(783)

தொடர்பு:
077 990 6867, 076 007 1688

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


# மரண அறிவித்தல்



பிறப்பு
30.06.1958

இறப்பு
22.01.2025

## சபாபதிப்பிள்ளை நித்தியானந்தன்

இணுவில் மேற்கு செட்டிவளவு ஒழுங்கையைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை நித்தியானந்தன் கடந்த 22.01.2025 புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - சிறீமாவதி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - திருப்புகழாம்பிகை தம்பதியினரின் அன்பு மருமகனும் றஜீனாவின் அன்புக் கணவரும் கணேசலிங்கம்(கனடா), லக்சிகா, சபாலிங்கம், நிரோசிகா(ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரசாந்தன்(சிறைச்சாலை உத்தியோகத்தர்), குகதர்சிகா, எழிலன்(ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சர்வானந்தன்(பிரான்ஸ்), சண்முகானந்தன்(கனடா), சச்சிதானந்தன்(கனடா), விக்னேஸ்வரன்(மின்சாரசபை - சுன்னாகம்), நந்தினி(நோர்வே), நளாயினி(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வநாயகம், காலஞ்சென்ற செல்வராணி, சிறீதரன், யசோதரா ஆகியோரின் மைத்துனரும் ஆதிகேசன், அக்சயா, நந்தனா, அபிவர்மன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்
070 139 6495

(C-2134)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையைத் தேடாதே அதை உருவாக்கு.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# அரச தமிழ் எம்.பிகள் உரக்கக் குரல் தரவேண்டும்

எங்கள் நாட்டில் தொகுதிவாரியான பாராளுமன்ற பிரதிநிதித்துவம் என்று இல்லாமல் போனதோ அன்று தொட்டுதான் அரசியல் பெருமந்தம்.

ஆம், முன்னாள் ஜனாதிபதி காலஞ்சென்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டு வந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை, பாராளுமன்ற உறுப்பினர் எனும் உயர் பெறுமதியைக் கணிசமாகக் குறைத்துவிட்டது.

இதற்கு மேலாக, விகிதாசாரப் பிரதிநிதித்துவம் அமுலுக்கு வந்தபோது அரசியல் கட்சிகள் உள்ளக முரண்பாடுகளைச் சந்திக்கலாயின.

உண்மை. இலங்கைத் திருநாட்டின் ஆரம்ப கால அரசியல் கட்சிகள் இன்று அரசியல் புலத்தில் இருந்து மறைந்து போயுள்ளன. உதாரணத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கைத் தமிழரசுக் கட்சி என்பன இந்த நாட்டின் ஆரம்ப கால முதன்மைக் கட்சிகளாக விளங்கின.

தவிர, மேற்குறித்த அரசியல் கட்சிகள் தொகுதிவாரியான பாராளுமன்ற முறைமை இருக்கும்வரை மக்கள் மத்தியில் உயர்ந்த இடத்தில் இருந்தன.

ஆனால் விகிதாசாரப் பிரதிநிதித்துவ நடைமுறை மாவட்ட ரீதியாக அமைந்தபோது, அரசியல் மீது மக்கள் கொண்டிருந்த நாட்டமும் பற்றும் மெல்ல நகரத் தொடங்கின.

அதாவது, தொகுதி ரீதியாகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தபோது அவர்கள் தத்தம் தொகுதிகளில் உள்ள பிரச்சினைகளை பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறுவதுடன் பொதுவான விடயங்களிலும் அதீத கவனம் எடுத்தனர்.

அதேநேரம் ஒரே கட்சிக்குள் வலுவான ஒற்றுமையும் நிலவியது.

குறிப்பாகப் பாராளுமன்றத் தேர்தலின் போது குறித்த ஒரு தொகுதியில் போட்டியிடுகின்ற வேட்பாளருக்காக அவரது கட்சியின் முக்கிய பிரமுகர்கள் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

ஆனால் விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை அறிமுகமானபோது உட்கட்சிப் பூசல்களும் உட்கட்சி முரண்பாடுகளும் வலுப்பெற்று; கட்சி உறுப்பினர்கள் கன்னை பிரிந்து நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

பரவாயில்லை. எது நடக்க வேண்டுமோ அது நடந்தாகிறது. இப்போது தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த மூவர் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர்.

இதேபோல தமிழர் தாயகத்தின் ஏனைய மாவட்டங்களிலும் ஆளும் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவாகியுள்ளனர்.

இவர்கள் தேசிய மக்கள் சக்தியை சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களின் முதன்மைப் பணி தமிழ் மக்களுக்காக – தமிழ் இனத்துக்காகக் குரல் கொடுப்பதாகும்.

இதனை அவர்கள் செய்யத் தவறுவார்களாயின், எங்கள் தமிழினத்தின் எதிர்காலம் மிகமோசமாக மாறிவிடும்.

# தேர்தல் விதி மீறல்களை துரிதமாக விசாரிக்க தனி நீதிமன்றம், வழக்குத் தாக்கல் அதிகாரம்

## கோருகிறது தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

தேர்தல் தொடர்பான வழக்குகளுக்காகத் தனியான நீதிமன்றக் கட்டமைப்பைக் கோரியுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் விதி மீறல் தொடர்பான வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகளை இதன் மூலம் இலகுபடுத்த முடியும், ஆனால் வழக்குத் தாக்கல் செய்யும் அதிகாரம் தற்போது தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இல்லை என அவர் கூறினார்.

எனவேதொழில்திணைக்களம், வனப்பாதுகாப்பு திணைக்களம் போன்றவற்றுக்கு இருப்பதைப் போல தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகளுக்கும் வழக்குத் தாக்கல் செய்யும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க வலியுறுத்தினார்.

மேலும், தேர்தலொன்றின் போது இழைக்கப்படும் குற்றம் தொடர்பாக அடுத்தத் தேர்தலுக்கு முன்னரேனும் தண்டனை வழங்கப்படாத பட்சத்தில் மக்கள் நம்பிக்கை இழப்பர்.

இதன் காரணமாக தொழில் நீதிமன்றத்தைப் போன்று நீதிமன்ற கட்டமைப்பிற்குள் தேர்தல் வழக்குகளை கையாள்வதற்கான பிரத்தியேக இடம் வழங்கப்படுமாயின் சிக்கல்களைத் தீர்க்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

# கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன்கள் தேக்கம்

கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன் நெரிசல் தீர்க்கப்பட்டும் என்று சுங்க அதிகாரிகள் கூறிய போதிலும், கொள்கலன்கள் இன்னும் துறைமுகத்தில் தேங்கி நிற்பதாக கொள்கலன் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களுடன் ஒப்பிடும்போது, துறைமுகத்தில் தேங்கியுள்ள கொள்கலன்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள தெரிவித்தார்.

மேலும், குறித்த கொள்கலன்களை உடனடியாக விடுவிப்பதற்கும் அதிகாரிகள்பணியில் இருப்பதை உறுதி செய்வதற்கும் சரியானமேற்பார்வை இல்லை என்று அவர் குற்றம் சாட்டினார். (ம-7)

# யோஷிதவின் கைது அரசியல் பழிவாங்கலே

## நாமல் எம்.பி ஆவேசம்

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து மக்களுக்குத் தேவையானவற்றைச் செயற்படுத்தாமல் அரசியல் பழிவாங்கல்களை மாத்திரமே மேற்கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்ட தனது சகோதரர் யோஷிதவை சந்தித்ததன் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அரசாங்கம் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை பாரிய சவாலாக எடுத்துக் கொண்டு இவ்வாறான அரசியல் பழிவாங்கல்களை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில், அரசாங்கம் தேர்தல் மேடைகளில் எவ்வளவு பொய்களைக் கூறினாலும் அவற்றை நீதிமன்றின் முன்னால் நிரூபித்துக் காட்ட வேண்டும் என்றும் நாமல் ராஜபக்ஷ சவால் விடுத்துள்ளார்.

மேலும் பொலிஸாரையும் எப்சிஐடி பிரிவினரை வைத்து வழக்குகளையும் பொய்ச் சாட்சிகளையும் உருவாக்கினாலும் நீதிமன்றத்தின் முன் அனைத்தும் விசாரணை செய்யப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

# மீன்களை இறக்குமதி செய்யும் நிலை ஏற்படும்

## எச்சரிக்கிறார் கைத்தொழில் அமைச்சர்

(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் மீன்களையும் இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்படக் கூடும் எனக்கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்குபற்றிய போது அவர் இதனைக் கூறினார்.

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மீன்கள் உரிய தரத்தில் ஏற்றுமதி செய்யப்படுவதில்லை.

உரிய தரத்தில் மீன் உற்பத்தி செய்வது குறித்த தெளிவின்மையே இதற்கான காரணம். இதனால் இலங்கையில் மீன் உற்பத்தியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கடந்த 70 ஆண்டுகளாகவே நாட்டின் உற்பத்திப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

# ஊழல்வாதிகளையே அரசு கைது செய்கிறது

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல

(கொழும்பு)

அரச நிதியை மோசடி செய்த ஊழல்வாதிகளை சட்டத்தின்பிரகாரம் கைது செய்யும் போது அதனை அரசியல் பழி வாங்கல் என்று குறிப்பிடுவது முற்றிலும் தவறானது.

ஊழலை இல்லாதொழிக்க வேண்டுமாயின் நிதி மோசடியாளர்களை சட்டத்தின் முன் முன்னிலைப்படுத்த வேண்டும்.

எவரையும் பழிவாங்கவும், பாதுகாக்கவும் வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாதெனப் பொதுமக்கள்பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஊழல் மோசடி குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவுடன் அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிட்டு அனுதாபத்தைப் பெற்றுக்கொள்ளவே ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள்.

சட்டம் அனைவருக்கும் சமமானதாக செயற்படுத்தப்படும். குற்றமிழைத்திருந்தால் நிச்சயம் தண்டனை அனுபவிக்க வேண்டும்.

நீதிமன்றத்தின் செயற்பாடுகளில் அரசாங்கம் தலையிடவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க வேண்டும். அதற்குத் தேவையான ஒத்துழைப்பை நீதி மற்றும் விசாரணைத் தரப்பினருக்கு வழங்குவோம் என்றார். (ம-7)

# வடமராட்சிக் கடலில் மீனவர் மீது தாக்குதல்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு வத்திராயன் கடற்பகுதியில் நேற்றுக் காலை தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வத்திராயன் பகுதியைச் சேர்ந்த மத்தியாஸ் வின்சன் பெனடிட் என்பவரின் வலைகள் கடலில் அறுத்தெறியப் பட்டமையினால் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

வாக்குவாதம் முற்றிய நிலையில் வின்சன் பெனடிட் இன் படகின் மீது மற்றுமொரு படகால் மோதி அவரை மூழ்கடிக்க எதிர்தரப்பினர் முனைந்துள்ளார்கள்.

இதனால், படகில் இருந்து காயங்களுடன் தூக்கி எறியப்பட்ட குறித்த மீனவர் கடலில் மூழ்கி உயிருக்குப் போராடிய நிலையில் அவருடன்தொழிலுக்குச்சென்ற மீனவரால் காப்பாற்றப்பட்டு காயங்களுடன் மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டிமன்ற நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

துன்னாலை நவிட்டான் பதி காளி அம்பாள் ஆலய சப்பை ரத திருவிழாவின் சிறப்பு நிகழ்வாக பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு பிரபல பேச்சாளர் பொன்.சுகந்தன் தலைமையில் இப் பட்டிமன்றம் இடம்பெறும்.(நி-8)

# நாவலர் விழாவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தால் நடத்தப்படும் நாவலர் விழாவும் பாலர் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா, சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பிரதிப் பதிவாளர் ஆனந்தி ஜெயரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-8)

# திருக்கேதீஸ்வர ஆலய மகா சிவராத்திரி விழா

## முன்னாயத்த கலந்துரையாடல்



(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு முன்னாயத்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையின் தலைவர் ராமகிருஷ்ணன் கலந்து கொண்டார்.

மேலும் பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், அரச, தனியார் போக்குவரத்துச் சங்க பிரதிநிதிகள் பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது எதிர்வரும் பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி இடம்பெற உள்ள மகா சிவராத்திரி விழாவிற்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் கடந்த வருடங்களைப் போன்று இம்முறையும் இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொள்ள உள்ள நிலையில் முன்னெடுக்கப்பட வேண்டிய முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

குறிப்பாக போக்குவரத்து ஒழுங்குகள், சுகாதாரம், மின்சாரம், நீர் விநியோகம், உணவு, பாதுகாப்பு,மருத்துவ வசதிகள் உள்ளடங்கலாக முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (நி-8-285)

# மன்னார் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்

## சந்தேக நபர்கள் விளக்க மறியலில்

(மன்னார்)

மன்னார் நீதிமன்றத்தின் முன் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன் கிழமை வரை விளக்க மறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மன்னார் நீதிமன்றத்தின் முன் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் வழக்கு விசாரணைக்காக வருகை தந்த இருவர் உயிரிழந்ததுடன்,பெண் ஒருவர் உள்ளடங்கலாக மேலும் இருவர் படுகாயம் அடைந்தனர்.

குறித்த சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் பலரைக் கைது செய்த நிலையில் கடந்த வியாழக்கிழமை மேலுமொருவரை கைது செய்துள்ளனர்.

மன்னாரைச் சேர்ந்த கடற்றொழிலாளர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த கொலை சம்பவத்திற்கு உதவி ஒத்தாசை வழங்கிய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்

இதேவேளை குறித்த சம்பவத்தின் பிரதான சந்தேக நபர்கள் அனைவரும் இராணுவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8-285)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:ரோகினி<br>கி.பா:15 1/2<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: A/L, தனியார்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15096 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 19 3/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Bsc in Production Technology<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14006 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:B.Sc Business Own<br>எதிர்பார்ப்பு: அரச வேலை<br>தொ.இ: B/15097 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>கி.பா: 11 3/4<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:Diploma in Teaching<br>எதிர்பார்ப்பு: உள்நாடு (அரச தொழில்), வெளிநாடு<br>தொ.இ: G/14008 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: B.A Teacher<br>எதிர்பார்ப்பு: அரச வேலை<br>தொ.இ: B/15098 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Bsc, Mateial Developer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/14009 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



# புதையல் தோண்ட முயற்சி; சந்தேக நபர்கள் 10 பேர் கைது

(கிளிநொச்சி)

புதையல் தோண்ட முயற்சித்த 10 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன்று காலை கிளிநொச்சி திருநகர் பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலிற்கு அமைவாக பொலிஸாரின் உதவியுடன் சுற்றிவளைப்பு மேற் கொள்ளப்பட்டது. குறித்த சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்ட 10 பேருடன் புதையல் தோண்ட பயன்படுத்திய ஸ்கானர் மற்றும் நீர்ப்பம்பி உள்ளிட்ட உபகரணங்களும் கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.



குறித்த சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-8-100-316)



தென்மராட்சி- மீசாலை நாவலர் முன்பள்ளியின் ஆண்டுவிழா நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் மீசாலை திருப்புகழ் மண்டபத்தில் இடம்பெற்றது. நாவலர் முன்பள்ளி ஆசிரியர் ஜெ.தேவகி தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/ இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய அதிபர் [illegible]ராஜிதன் கலந்து சிறப்பித்தார். (படம்- சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்...

அக்கராயன் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## மாகாண மட்டத்...

மாணவன் பரமேஸ்வரன் பிரசோதன் ஆகியோர் 186 புள்ளிகளைப் பெற்று மாகாண மட்டத்தில் முதலிடம் பிடித்துள்ளனர். (ம-7)

## யாழ்.பல்கலை...

வரப்பட்டுள்ளது.

விதிகளுக்குப் புறம்பாக நடைபெறும், நடைபெற்ற மாணவர்கள் மீதான விசாரணைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், போராடுதல், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் உள்ளிட்ட மாணவர்களின் அடிப்படை உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும், விரிவுரையாளர்கள் மீதான முறைகேடுகளைப் பாரபட்சமின்றி விசாரணை செய்ய வேண்டும், மாணவர்களின் கற்றலுக்கான சுதந்திரத்தை உறுதி செய்ய வேண்டும் ஆகிய 4 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 2 நாட்கள் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் நேற்று நடைபெற்ற பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டத்தில் குறித்த கோரிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பல்கலைக்கழகப் பேரவையினால் வழங்கப்பட்ட உறுதிப்பாட்டையடுத்து, பல்கலைக்கழக மாணவர்களின் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் கைவிடப்பட்டது. (ம-7)

## தலைமன்னாரில்...

இதில் மாத்தளையைச் சேர்ந்த வெலகெதர நிசான் சானகா (வயது-34) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

மேற்படி இளைஞர் லொறி ஒன்றில் நடத்துநராகக் கடமை புரிந்துள்ளார். கடந்த 14 ஆம் திகதி லொறியில் பயணித்துக் கொண்டிருந்தபோது தலைமன்னார் கட்டைப்பறிச்சான் பகுதியில் லொறி மரத்துடன் மோதியதில் படுகாயமடைந்துள்ளார்.

தொடர்ந்து மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 6.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம்மரணம்தொடர்பில்யாழ்போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். (ம-7,60)

## அரசியலமைப்புத்...

பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்திடம் நேற்று வழங்கி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"கடந்த பாராளுமன்றத் தேர்தல் காலத்திலும் அதற்குப் பின்னரும் தமிழருடைய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக, அரசாங்கத்திடம் வினாவுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த பிரதிநிதிகளாலும், ஜனாதிபதியாலும் தமிழருடைய இனப்பிரச்சினை விடயமானது, புதிய அரசியலமைப்பினூடாகவே கையாளப்படும் என்ற கருத்தை உத்தியோகபூர்வமாகப் பதிவு செய்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அந்தவகையில் தமிழ் மக்கள் கடந்த தேர்தலில் மூன்று தமிழ் கட்சிகளுக்கும் வழங்கிய ஏகோபித்த ஆணையின் அடிப்படையில் தமிழ்த் தேசத்தின் அங்கீகாரம், தமிழ்த் தேசத்தின் சுயநிர்ணய உரிமை மற்றும் தமிழ்த் தேசத்தின் தனித்துவமான இறைமையின் அடிப்படையில், இணைந்த வடக்கு-கிழக்கு தமிழர் தாயகம் என்ற அடிப்படையில் சமஷ்டித் தீர்வை வலியுறுத்திய புதிய அரசியலமைப்புக்கான பொது யோசனையொன்றை முன்வைப்பதற்கும், அரசாங்கம் உத்தேசித்துள்ள ஏக்கிராஜ்ய அரசியலமைப்பை தமிழ்த் தரப்பாக ஒன்றிணைந்து பாராளுமன்றத்தில் நிராகரிப்பதற்குமான முயற்சியில் தங்களுடைய கட்சியின் ஒத்துழைப்பும் மிக அவசியமானதாகும்.

பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஒரு தலைப்பட்சமாக தீர்மானங்களை நிறைவேற்றக் கூடியதான பலத்தில் அரசாங்கம் உள்ள நிலையில் அரசியல் தீர்வு விடயத்தில் பாராளுமன்றில் உள்ள தமிழ்க் கட்சிகளிடையே இணக்கப்பாடு ஏற்படவில்லையாயின், 19 தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற எண்ணிக்கையுடன் தொடர்புடைய அறுதிப் பெரும்பான்மை நிலைப்பாட்டை தமிழ் மக்கள் சார்பாக வெளிப்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்படுவோம்.

பாராளுமன்றில் 8 ஆசனங்களைக் கொண்டிருக்கின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியும், தலா ஒவ்வொரு ஆசனத்தைப் பெற்றுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் ஒரு புள்ளியில் சந்திப்பதன் மூலம் தமிழர் தாயகத்தில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் அறுதிப் பெரும்பான்மையான 10 ஆசனங்களை பாராளு மன்றில் உறுதிப்படுத்துவதற்குரிய ஒரு முயற்சியை மேற்கொள்கின்ற வகையிலேயே இந்த முயற்சி அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## தின...

மேம்படுத்துவதற்கும் நீண்ட தூர சேவைகளுக்காகவும் பலபுதியதொடருந்து சேவைகளை அறிமுகப்படுத்துவதற்கும் தீர்மானித் துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ம-7)

## மகிந்...

யிருந்தாலும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் அமைச்சர் கூறியதாவது, "யாராவது சட்டவிரோதமாகவோ அல்லது சந்தேகத்திற்கிடமான முறையில் நிலங்கள் அல்லது சொத்துக்களை வாங்கியிருந்தால், அத்தகைய வழக்குகளில் சி.ஐ.டி விசாரணைகள் நடத்தப்பட்டு சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறதாகவும் யோஷித, மகிந்த ராஜபக்ஷவின் மகன் என்பதால் கைது செய்யப்படவில்லை எனக் கூறியுள்ளார். (ம-7)

## செல்போன்...

"புதிய நடைமுறைக்கு அமைய, ஜனவரி மாதம் 28ஆம் திகதிக்குப் பின்னர் கொள்வனவு செய்யப்படுகின்ற கையடக்கத் தொலைபேசியில் சிம் அட்டையை உட்செலுத்தும் போது, அந்த கையடக்கத் தொலைபேசி இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவில் பதிவு செய்யப்படாததாக இருந்தால், அந்தத் தொலைபேசிக்கு குறுந்தகவல் ஒன்று கிடைக்கப்பெறும்."

"இந்தக் குறுந்தகவல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பயன்பாட்டாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். நாட்டில் இடம்பெறுகின்ற மோசடிகளுக்கு கையடக்கத் தொலைபேசிகள் மிக முக்கியமான காரணமாக அமைந்துள்ளன. அதனால், கையடக்கத் தொலைபேசிகள் சட்டரீதியானதாகக் காணப்படுகின்றமையானது, பயன்பாட்டாளர்களுக்கு மிகவும் பாதுகாப்பானதாகும்" எனத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் தெரிவித்தார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.01.25
சீட்டிழுப்பு இலக்கம் 5727
C 2 6 7 7 0 7
அத சம்பத C 7 7 0 7
சீட்டிழுப்பு இலக்கம் 302
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.01.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1757
V 02 09 40 42 V
22275

மெகா பவர்
திகதி 25/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2075
V 12 06 29 45 65

லக்கி 7 VIP
திகதி 2025.01.25
சீட்டிழுப்பு இலக்கம் 553
N 0 8 2 9 1 9 N

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3969
சீட்டிழுப்பு திகதி 25.01.2025
N 06 59 60 74
N
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.25
சீட்டிழுப்பு இலக்கம் 1036
கடகம் 10 35 37 40 கடகம்
17228 12

உத்தியோகபூர்வ முடிவுகள்
25.01.2025 வெற்றி வாரம் 435
X 3 8 8 3 0 0
94805
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29,827,885.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2701
சீட்டிழுப்பு திகதி 2025.01.25 தினம் சனிக்கிழமை
11 20 34 42 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 82,101,311.20
DLB

சனிதா
திகதி 25.01.2025 வெற்றி வாரம் 4862
41 49 54 66 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,062,697.60
51880
DLB

சசிரி
வெற்றி வாரம் 608
சீட்டிழுப்பு திகதி 25.01.2025 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 23 39
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4413
சீட்டிழுப்பு திகதி 25.01.2025 தினம் சனிக்கிழமை
28 45 46 50 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,929,734.80
262488
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 06 05 20 24 36
1877
25.01.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.563,079,367.00
DLB

சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2527
சீட்டிழுப்பு திகதி : 2025.01.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,862,226.40
ADA KOTIPATHI
04 54 58 60 C
780933
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டடம் வாடகைக்கு

கிளிநொச்சி A9 வீதியில் முன்னைய அரச அதிபர் காரியாலயம் அருகாமையில் 1300 சதுர அடி எல்லா வசதிகளுடன் உண்டு. நிறுவனங்கள் மட்டும்.

தொடர்புகளுக்கு : **074 194 1410** (781)

## A/L PHYSICS

2024, 2025, 2026 Batch

இற்கான தனிப்பட்ட வகுப்புகளிற்கு

**Ranjit Sir**

B.Sc, P.G.D.E, S.L.P.S - I

T.N : 077 600 4896

YMCA - தம்பசிட்டி,

SCK - 2nd Cross st. Jaffna. (3215)

## STUDY IN UK

CANADA / AUSTRALIA / FRANCE / SWITZERLAND



**IELTS**

இம்மாதம் முழுவதும் நிபந்தனைகள் எதுவும் இல்லா 100% இலவச

விசா ஆலோசனைகள் மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் வழங்கப்படும்

**WEC COLLEGE**

ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

மற்றும் கிளை : சாவகச்சேரி

0779265447/ 0217200989 (297)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1991 ம் ஆண்டு பிறந்த பூராடம் 1 ம் பாதம், 10 இல் சூரியன் செவ்வாய், கிரக பாவம் 13 1/2 உள்ள அலுவலக உதவியாளராக அரச பணி புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (777)

**077 044 0431**

## தேவை

G.C.E O/L, A/L மற்றும் தொழில்நுட்ப பாடநெறிகளை விளம்பரப் படுத்துவதற்கு Marketing personnel (Part time) தேவை.

மின்னஞ்சல்/ Whatsapp மூலம் விண்ணப்பிக்கவும்

apssengineering@gmail.com/ 077 386 7695

No.188, K.K.S Road, Chunnakam. (782)

## உடனடி வேலைவாய்ப்பு

முகமாலை - பளையில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- கொத்து றொட்டி/ பிறைட் றைஸ் தயாரிப்பாளர்
- சமையலாளர்
- பழரசம் தயாரிப்பாளர்

தொடர்புகளுக்கு :

**076 858 2732/ 077 720 9387/ 074 070 5066** (3217)

## பதவி வெற்றிடம்

யாழில் உள்ள பிரபல வைத்தியசாலையில் பின்வரும் பதவிகளுக்கு தகுந்த ஊழியர்களை எதிர்பார்க்கின்றோம்.

- Maintenance Officer (பராமரிப்பு உத்தியோகத்தர்)
- Pharmacist Assistant (மருந்தக உதவியாளர்)
- Dental Assistant (பற்சிகிச்சை உதவியாளர்)
- MLT (மருத்துவ ஆய்வுகூட பரிசோதகர்)

குறிப்பு: யாழ். நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் உங்களது சுயவிபரக்கோவையினை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு 05.02.2025 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும். (3204)

தொடர்புகளுக்கு: **074 202 7318**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

- சம்பளம் 60,000/-
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை 33 - 55

தொடர்புகளுக்கு :

**075 498 5400, 077 937 0000**

**021 221 7600** (3221)

## காணி விற்பனைக்குண்டு

வசாவிளான், பலாலி தெற்கு J/252 GS பிரிவில் 12 பரப்பு தோட்டக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.

- பரப்பு 8 லட்சம்
- விலை பேசித் தீர்மானிக்கலாம்.
- வளலாய் – தம்பாலை வீதியில் இருந்து 50m இல்
- தரகர் தேவையில்லை.

(3098)

**076 880 1144**

**077 493 8304**

## முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளைக்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### அடிப்படைத் தகைமைகள்

- ✓ G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- ✓ 18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக் கோவையை (BIO DATA) கீழ்வரும் Whatsapp இலக்கத்துக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (3208)

Whatsapp: **077 756 3781**

jenyjude77@yahoo.com

## அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான றோயல் நெய்

Royal

உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை தரமான றோயல் நெய் கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்



ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.

குறிப்பு :- யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க் கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம் (C-2131)

Marketed By :-

சிவா நறுமணப் பூங்கா®

இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே : 021 2222 567

Packed By:- Royal Industries®

## V2 VISA SERVICES

கனடா

077 77 20 322

077 77 19 322

Visit Visas

Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**

வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-2133)

## காணி விற்பனைக்கு

மாவிட்டபுரம் வீமன்காமத்தில் காணி விற்பனைக்கு உண்டு. (778)

**076 444 9377**

## MARD

கோப்பாய், மருதனார்மட கிளைகளில் இதே விலைகளில் பொருட்களை கொள்வனவு செய்ய முடியும்.

| | | | |
|---|---|---|---|
| Rs. 219.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs. 389.00 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 979.00 Max 1 PCS Anchor 400g | Rs. 289.00 Bulk ரவை | Rs. 49.00 ~~80~~ Anchor Yoghurt | Rs. 1749.00 Max 1 PCS ~~2100~~ Protinex |
| Rs. 339.00 ~~425~~ Vim Liquid | Rs. 2499.00 ~~3000~~ Vitagen Vannila | Rs. 339.00 ~~380~~ Sunlight Powder Rose | Rs. 1129.00 ~~1190~~ Anchor Plus |
| Rs. 139.00 ~~175~~ Santoor Soap | Rs. 399.00 ~~480~~ Chick Shampoo | Rs. 2999.00 ~~3335~~ Diabeta Plus | Rs. 349.00 ~~500~~ Ocean Star Mackerel |
| Rs. 919.00 5kg ~~1150~~ Prima Wheat Flour | Rs. 3349.00 Max 1 PCS ~~3900~~ Sustagen 400g | Rs. 149.00 ~~200~~ Noodles | Rs. 349.00 ~~400~~ Pepsi 1.5L |
| Rs. 199.00 ~~270~~ Fems 10 Pcs Pads | Rs. 799.00 ~~1200~~ Marvel 16 Pcs | Rs. 459.00 ~~695~~ Cute Baby Wipes | Rs. 2699.00 ~~3000~~ Vijitha 10Kg |

மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

(கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு அருகாமையில்)

074 2327 545

மருதனார்மடம் (யாழ். இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவும், வட இலங்கை சங்கீத சபைக்கு அருகிலும்)

074 1011 345 (C-2...)

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%

- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு : (531)

**075 033 6759**

## வேலையாட்கள் தேவை

வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு (service station) அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. (3210)

**077 901 8742**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 223/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg ரவை | - 282/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 275/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 399/= | |
| 1Kg கீரிச் சம்பா | - 255/= | |
| 1Kg சர்க்கரை | - 260/= | |
| 1Kg கடலை | - 475/= | |
| 1Kg பயறு | - 550/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 640/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 235/= | |
| 1Kg சம்பா(உள்நாடு) | - 240/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு No.1 | - 760/= | |
| 10Kg விஜிதா அரிசி | - 2650/= | ~~3000/=~~ |
| 400g லக்ஸ்பிறே பால்மா | - 975/= | ~~1050/=~~ |

400g Anchor 990/= ~~1050/=~~

1 டசின் தீப்பெட்டி SOORYA 160/= ~~240/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (784)

Happy Supermarket 0777 8080 30

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org